සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2018)

# Limited/Open Competitive Examination for Recruitment to Class III of the Sri Lanka Accountants' Service - 2016 (2018)

## (01) நிதிக் கணக்கியல் - வினாத்தாள் I
## Financial Accounting - Paper I

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**1.** பின்வரும் அட்டவணையானது 31 மார்ச் 2017 இல் உள்ளவாறான வரையறுத்த கொழும்பு PLC இன் ஏடுகளிலுள்ள மீதிகளை எடுத்துக் காட்டுகின்றது.

| | வரவு (ரு. '000) | | செலவு (ரு.'000) |
|---|---|---|---|
| காணி - கிரயத்தில் | 250 000 | முதலீட்டின் மூலமான வருமானம் | 12 000 |
| கட்டடம் - கிரயத்தில் | 100 000 | 01.04.2016 இல் உள்ளவாறு | |
| தளபாடம் - கிரயத்தில் | 30 000 | அறவிடமுடியாக் கடன்களுக்கான ஏற்பாடு | 2 000 |
| வருமதியாளர்கள் | 50 000 | சென்மதியாளர்கள் | 30 000 |
| இருப்புக்கள் 31.03.2017 இல் உள்ளவாறு | 40 000 | பெறுமானத் தேய்வு ஏற்பாடு 01.04.2016 | |
| வங்கியில் உள்ள காசு | 15 000 | இல் உள்ளவாறு | |
| கையிலுள்ள காசு | 1 000 | – கட்டடம் | 5 000 |
| விற்பனைக் கிரயம் | 300 000 | – தளபாடம் | 5 000 |
| சம்பளங்கள் | 15 000 | சாதாரண மூலதனம் | 370 000 |
| நானாவித செலவுகள் | 8 000 | 10% திரண்ட முன்னுரிமைப் பங்கு | |
| பங்குகளில் முதலீடு | 200 000 | மூலதனம் | 80 000 |
| வட்டிச் செலவுகள் | 3 000 | ஒதுக்கங்கள் | 20 000 |
| அறவிடமுடியாக் கடன்கள் | 1 000 | வங்கி மேலதிகப் பற்று | 100 000 |
| திருத்தங்களும் பராமரிப்பும் | 1 500 | விற்பனைகள் | 400 000 |
| வருமான வரிக்கான முற்பணக் கொடுப்பனவு | 16 000 | நிறுத்தி வைத்த வருவாய்கள் 01.04.2016 | |
| | | உள்ளவாறு | 6 500 |
| | **1 030 500** | | **1 030 500** |

**மேலதிக தகவல்கள் :**

(i) காணியானது 01.01.2017 இல் நிபுணத்துவம் பெற்ற மதிப்பீட்டாளர் ஒருவரால் ரு. 350 000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போதும் இது புத்தகங்களில் இனங்காணப்படவில்லை எனினும் மீள்மதிப்பீடு செய்த தொகையை சீராக்குவதற்கு இயக்குனர்கள் தீர்மானித்தனர்.

(ii) வருமதியாளர்கள் தொகையின் 5% ஆக அறவிடமுடியாக்கடன்களுக்கான ஏற்படானது சீராக்கப்பட வேண்டும்.

(iii) வரிவிதிப்புக்கான ஏற்பாடானது இலாபத்தின் 30% ஆக செய்யப்பட வேண்டும்.

(iv) முதலீட்டின் சந்தைப் பெறுமதியானது 31.03.2017 இல் ரு. 185 000 ஆகும்.

(v) கம்பனியின் இயக்குனர்கள் வரிக்கு முந்திய இலாபத்தின் மீது 5% ஐ மிகையூதியமாகப் பெற உரித்துடையவர்களாவர்.

(vi) குறைந்து செல் மீதி முறையில் வருடாந்தம் கட்டடங்கள் 2% ; தளபாடம் 10% ஆக பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

(vii) 31.03.2016 வரையிலான 5 வருட காலப் பகுதிக்கு திரண்ட முன்னுரிமைப் பங்குகளின் பங்கிலாபங்கள் சென்மதியாகவுள்ளது.

(viii) 31.03.2017 இன் பின்னர் முதிர்வடையவுள்ள வருமதி உண்டியல்கள் ரு. 6 500 கழிவீடு செய்யப்பட வேண்டியுள்ளது.

**வேண்டப்படுபவை:**

LKAS 1 பிரகாரம் (நிதிக் கூற்றுகளைச் சமர்ப்பித்தல்) பிரசுரிப்பதற்காக வரையறுத்த கொழும்பு PLC இன் பின்வரும் நிதிக் கூற்றுகள் (குறிப்புக்கள் உள்ளடங்கலாக)

(1) 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முற்றும் அடங்கிய வருமானக் கூற்று

(2) 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றங்களுக்கான கூற்று

(3) 31.03.2017 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

*(25 புள்ளிகள்)*

/பக். 2 ஐப் பார்க்க

**2.** சிலாபம் வியாபாரிகளின் வருமானக் கூற்றும் நிதி நிலைமைக் கூற்றும் கீழே தரப்படுகின்றது.

**31. 03. 2017 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று**

| | ரூ. '000 | ரூ. '000 |
|---|---|---|
| விற்பனைகள் | | 300 000 |
| கழி: விற்பனைக் கிரயங்கள் | | (258 000) |
| மொத்த இலாபம் | | 42 000 |
| செயற்பாட்டுச் செலவுகள் | | 10 000 |
| – விற்பனை விநியோகம் | 2 200 | |
| – பொது நிர்வாகம் | 4 000 | |
| – அலுவலக வாடகை | 2 800 | (9 000) |
| மொத்தச் செயற்பாட்டு இலாபம் | | 33 000 |
| பெறுமானத் தேய்வு | | (10 000) |
| | | 23 000 |
| ஏனைய வருமானங்கள் | | |
| அரசாங்க பிணைகள் மீதான வட்டி | | 1 500 |
| | | 24 500 |
| நிதிக் கிரயம் | | |
| – வங்கி மேலதிகப்பற்று வட்டி | 300 | |
| – கடன் மீதான வட்டி | 4 200 | (4 500) |
| வரிக்கு முந்திய தேறிய வருமானம் | | 20 000 |
| வரி 30% | | (6 000) |
| வரிக்கு பிந்திய தேறிய வருமானம் | | **14 000** |

**31. 03. 2017 இல் உள்ளவாறான நிதி நிலைமை**

| | ரூ. '000 | | | ரூ. '000 |
|---|---|---|---|---|
| நானாவித சென்மதியாளர் | 6 000 | காசு | | 5 000 |
| சென்மதி உண்டியல்கள் | 10 000 | முதலீடுகள் (அரசாங்க பிணைகள்) | | 15 000 |
| சென்மதியாகவுள்ள செலவுகள் | 1 000 | நானாவித வருமதியாளர்கள் | | 20 000 |
| வரிவிதிப்புக்கான ஏற்பாடு | 13 000 | சரக்கிருப்பு | | 30 000 |
| மொத்த நடைமுறை பொறுப்புக்கள் | 30 000 | மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 70 000 |
| ஈட்டு வங்கிக் கடன் | 70 000 | நடைமுறையல்லா சொத்துக்கள் | 180 000 | |
| | | திரண்ட பெறுமானத் தேய்வு | (50 000) | 130 000 |
| பங்கு மூலதனம் | 60 000 | | | |
| ஒதுக்கங்கள் | 40 000 | | | |
| | **200 000** | | | **200 000** |

**மேலதிக தகவல் :**

பங்கு ஒன்றின் சந்தை விலை ரூ. 50 ஆகும்.

**வேண்டப்படுவது :**

பின்வரும் ஒவ்வொரு வகைகளில் இருந்தும் இரண்டு விகிதங்களைக் கணிப்பிடுக.

இலாபத்தன்மை, திரவத்தன்மை, முதலீடு, செயற்பாடு

*(10 புள்ளிகள்)*

[பக். 3 ஐப் பார்க்க

**3.** பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் கண்டி வியாபாரிகள் நிறுவனத்தில் 2017 டிசம்பர் மாதத்தின்போது நிகழ்ந்துள்ளன.

(i) டிசம்பர் மாத முடிவில் வாகனமொன்று ரூ. 2 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டு இதன் 80% காசாகத் தீர்க்கப்பட்டதுடன் மிகுதி 20% ஒரு மாதம் பிற்திகதியிடப்பட்ட (post dated) காசோலையாகப் பெறப்பட்டது. இவ்வாகனம் 2015 ஜனவரி ஆரம்பத்தில் ரூ. 4 மில்லியனுக்கு வாங்கப்பட்டிருந்தது. பெறுமானத்தேய்வானது கிரயத்தின் மீது வருடாந்தம் 20% ஆக செய்யப்பட்டது.

(ii) டிசம்பர் மாதத்தின் விற்பனைகளின் மொத்தப் பெறுமதி ரூ.6 மில்லியன் ஆகும். இதில் 70% கடனாகவும் மிகுதி காசு அடிப்படையிலும் காணப்படுகின்றது. சராசரி அறவிடமுடியாக் கடன்கள் கடன் விற்பனையின் மீது 5% ஆக காணப்படுகின்றது. டிசம்பர் ஆரம்பத்திலும் இறுதியிலும் வருமதியாளர்கள் மீதி முறையே ரூ. 3 மில்லியன் மற்றும் ரூ. 2.5 மில்லியன்கள் ஆகும்.

(iii) டிசம்பர் மாதத்தில் கொள்வனவுகளின் மொத்தப் பெறுமதி ரூ. 5 மில்லியன்கள் ஆகும். இதில் 50% பட்டியல்கள் 10% வியாபாரக் கழிவுடன் கொடுத்துத் தீர்க்கப்பட்டது.

(iv) டிசம்பர் மாதத்தில் பெறுமானத்தேய்வு ரூ. 1 மில்லியன் உள்ளடங்கலாக, மொத்த செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 3 மில்லியன்கள் ஆகும். இதில் 80% செலுத்தப்பட்டுள்ளது.

(v) மதிப்பிடப்பட்ட வருமானவரிப் பொறுப்பு ரூ. 2 மில்லியன்கள் ஆகும். இதில் 70% டிசம்பரில் செலுத்தப்பட்டது.

(vi) விநியோக வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக டிசம்பரில் ரூ. 10 மில்லியனுக்கு வங்கியூடாக குத்தகை வசதி ஏற்பாடு செய்யப்பட்டது. ஆரம்பக் கொடுப்பனவாக (down payment) ரூ. 500 000 செலுத்தப்பட்டதுடன் 1வது தவணைப்பணம் ஜனவரி 2018 இல் செலுத்த வேண்டியுள்ளது.

(vii) டிசம்பர் மாதத்தில் வழங்கப்பட தீர்மானித்த பங்குகளின் மொத்தப் பெறுமதி ரூ. 20 மில்லியன்கள் ஆகும். இது 3 மடங்கு மிகையாக செலுத்தப்பட்டுள்ளது. இம்மேலதிக பணம் சம்பந்தமாக இதுவரையில் எதுவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

(viii) டிசம்பர் மாதத்தில் வாங்கப்பட்ட காணியின் பெறுமதி ரூ. 40 மில்லியன்கள் ஆகும். இதற்கான கொடுப்பனவு ரூ. 35 மில்லியன்கள் பெறுமதியான பங்குகள் மூலமும் மிகுதி காசாகவும் கொடுத்துத் தீர்க்கப்பட்டது.

(ix) டிசம்பர் 01 ஆம் திகதியன்று ரூ. 50 மில்லியன் கடன்களாகக் காணப்படுகின்றன. இக்கடனுக்கான வட்டி வருடாந்தம் 15% ஆகக் காணப்படுவதுடன் இது ஒவ்வொரு மாதமும் நிறுவனத்தின் நடைமுறைக் கணக்கின் மூலம் அறவிடப்பட்டது. மேலதிகமாக நிறுவன நடைமுறைக் கணக்குக்கு ரூ. 25 000 வங்கிக் கட்டணமாக அறவிடப்பட்டது.

(x) கம்பனியால் பிரகடனப்படுத்தப்பட்ட பங்கிலாபங்களின் மொத்தத் தொகை ரூ. 5 மில்லியன்கள் ஆகும். இதில் 60% பங்குகள் மூலமும் மிகுதியை டிசம்பரில் காசாகவும் இயக்குனர்கள் வழங்கினர்.

(xi) 01 டிசம்பர் 2017 இல் காசும் காசுக்கு சமமானவைகளினதும் பற்றாக்குறை மீதி ரூ. 3 மில்லியன்கள் ஆகும்.

**வேண்டப்படுவது :**

31 டிசம்பர் 2017 இல் முடிவடைந்த மாதத்துக்கான காசுப் பாய்ச்சற் கூற்று

*(20 புள்ளிகள்)*

/பக். 4 ஐப் பார்க்க

**4.** (a) காலி வியாபாரிகளின் காசுப் புத்தக வங்கி மீதி ரூ. 50 000 (மேலதிகப் பற்று) 31 டிசம்பர் 2017 இல் உள்ளவாறான வங்கிக்கூற்று மீதியுடன் இணங்கவில்லை. பின்வரும் காரணங்களினால் இரண்டு மீதிகளும் சமமாக இருக்கவில்லை என கணக்கு உதவியாளர் உறுதிப்படுத்தினார்.

(i) சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் மொத்தத் தொகை ரூ. 65 000 ஆகும்.

(ii) அவர்களது வியாபார காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாத வங்கிக் கட்டணங்கள் ரூ. 2 000 ஆகும்.

(iii) வாடிக்கையாளர் ஒருவரால் வங்கிக்கு செய்யப்பட்ட நேரடி வைப்பு ரூ. 15 000 ஆகும்.

(iv) வாடிக்கையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட காசோலை ரூ. 20 000 வங்கியால் செலுத்தப்பட்டதுடன் இது காசுப் புத்தகத்தில் ரூ. 2 000 என பதியப்பட்டுள்ளது.

(v) வைப்புச் செய்யப்பட்டபோதும் 31.12.2017 இல் உள்ளவாறு வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ. 30 000 ஆகும்.

**வேண்டப்படுபவை :**

(1) 31 டிசம்பர் 2017 இல் உள்ளவாறு காசுப் புத்தகத்திலுள்ள சீராக்கப்பட்ட காசு மீதி

(2) டிசம்பர் 2017 மாதத்திற்கான வங்கிக்கணக்கு இணக்கக்கூற்று

*(10 புள்ளிகள்)*

(b) பின்வருவன 31 டிசம்பர் 2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான வரையறுத்த மாத்தறை PLC நிறுவனத்தின் ரூ. 100 பெறுமதியான 18% முன்னுரிமைப் பங்குகளின் முதலீடுகளுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் ஆகும். ஒவ்வொரு வருடத்தினதும் மார்ச் மற்றும் செப்ரெம்பர் மாத இறுதியில் பங்கிலாபங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு செலுத்தப்படுகின்றது.

| | |
|---|---|
| ஜனவரி 15 | - ஒவ்வொன்றும் 100 ரூபா பெறுமதியான 20 000, 18% மூன்னுரிமைப் பங்குகள் ரூ. 3.5 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. |
| ஜனவரி 31 | - 5 000 பங்குகள் ரூ. 1 மில்லியனுக்கு இலாபத்துடன் விற்கப்பட்டது. |
| மார்ச் 31 | - இறுதிப் பங்கிலாபம் பெற்றுக் கொள்ளப்பட்டது. |
| ஜூன் 30 | - 10 000, ரூ. 100 பெறுமதியான 18% முன்னுரிமைப் பங்குகள் ரூ. 1.5 மில்லியனுக்கு இலாபம் நீக்கி கொள்வனவு செய்யப்பட்டது. |
| செப்டெம்பர் 30 | - இடைக்காலப் பங்கிலாபம் பெற்றுக் கொள்ளப்பட்டது. |
| டிசம்பர் 31 | - ரூ. 100 பெறுமதியான 18% முன்னுரிமைப் பங்குகளின் சந்தை விலை ரூ. 220 ஆகும். |

வரி விதிப்பு, தரகுக் கட்டணம் மற்றும் எனைய கட்டணங்களைப் புறக்கணிக்குக.

**வேண்டப்படுபவை :**

(1) 2017 ஆம் ஆண்டுக்கான ரூ. 100 பெறுமதியான 18% முன்னுரிமைப் பங்குகளின் முதலீட்டுக் கணக்கு

(2) இம்முதலீடு தொடர்பில் 31 டிசம்பர் 2017 இல் ஐந்தொகையில் காணப்படுகின்றவாறு பிரித்தெடுக்கப்பட்ட உருப்படிகள்

*(15 புள்ளிகள்)*

*(மொத்தம் 25 புள்ளிகள்)*

**5.** (a) யாழ்ப்பாண வியாபாரிகள் 01 ஜனவரி 2015 இல் ஒவ்வொரு வருட இறுதியிலும் ரூ. 420 000 ஐ வருடாந்த குத்தகைக் கட்டணமாகச் செலுத்த வேண்டிய இயந்திரங்களுக்கான 5 வருட இரத்துச் செய்யப்பட முடியாத குத்தகையில் ஈடுபட்டுள்ளது.

01 ஜனவரி 2015 இல் இவ்வியந்திரத்தின் முற்றும் நேரடியான (out right) விற்பனை விலை ரூ. 1. 5 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

**வேண்டப்படுபவை :**

(1) குத்தகைக் காலம் முழுவதற்குமான மொத்த குத்தகையின் வட்டி

(2) எண்களின் கூட்டுத்தொகை முறையைப் (sum of digits method) பயன்படுத்துவதன் மூலம் இந்த குத்தகையின் வட்டியை முழுக் காலப்பகுதிக்குமான கணக்கீட்டு வருடத்துக்கான நிதிக் கட்டணத்தை ஒதுக்குவதில் பயன்படுத்தவேண்டிய பகுதியினைக் கணிப்பிடுக.

(3) குத்தகை ஏற்பாடு தொடர்பில் 31 டிசம்பர் 2017 இல் உள்ளவாறான யாழ்ப்பாண வியாபாரிகளின் ஐந்தொகையில் பிரித்தெடுக்கப்பட்ட உருப்படிகளைக் காட்டுக. இயந்திரங்கள் மீது வருடாந்தம் கிரயத்தில் 20% பெறுமானத்தேய்வாக மேற்கொள்கின்றனர்.

*(05 புள்ளிகள்)*

[பக். 5 ஐப் பார்க்க

(b) பீற்றா PLC நிறுவனத்தின் தலைமைக் காரியாலயம் கொழும்பில் அமைந்துள்ளதுடன் இது திருகோணமலையில் ஒரு கிளையையும் கொண்டுள்ளது. 31 டிசம்பர் 2017 இல் உள்ளவாறு தலைமைக் காரியாலயம் மற்றும் கிளையின் ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பரீட்சை மீதிகள் கீழே தரப்படுகின்றது.

| | தலைமைக் காரியாலயம் | | கிளை | |
|---|---|---|---|---|
| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
| நிர்வாகச் செலவுகள் | 135 000 | – | 9 000 | – |
| கிளை நடைமுறைக் கணக்கு | 46 000 | – | – | – |
| கூறப்பட்ட மூலதனம் | – | 300 000 | – | – |
| வங்கியில் உள்ள காசு | 19 000 | – | 2 000 | – |
| சென்மதியாளர்கள் | – | 22 500 | – | 5 000 |
| வருமதியாளர்கள் | 15 000 | – | 20 000 | – |
| விநியோகக் கிரயம் | 30 000 | – | 12 000 | – |
| கிளைக்கு அனுப்பிய சரக்கு | – | 166 000 | – | – |
| தலைமைக் காரியாலய நடைமுறைக் கணக்கு | – | – | – | 24 000 |
| பொறியும் இயந்திரமும் (தேறிய புத்தகப் பெறுமதி) | 383 000 | – | 38 000 | – |
| 01.01.2017 இல் உள்ளவாறு இலாபநட்டக் கணக்கு | – | 28 000 | – | – |
| 01.01.2017 இல் உள்ளவாறு தேறாத இலாப ஏற்பாடு | – | 1 500 | – | – |
| கொள்வனவுகள் | 225 000 | – | 154 000 | – |
| விற்பனைகள் | – | 350 000 | – | 215 000 |
| 01.01.2017 இல் உள்ளவாறு கிரயத்தில் சரக்கிருப்பு அல்லது கிளைக்கான கிரயம் | 15 000 | – | 9 000 | – |
| | **868 000** | **868 000** | **244 000** | **244 000** |

**மேலதிகத் தகவல்கள் :**

(i) 31 டிசம்பர் 2017 இல் உள்ளவாறு சரக்கிருப்புக்களின் பெறுமதி வருமாறு :

| | ரூ. |
|---|---|
| – தலைமைக் காரியாலயம் - கிரயத்தில் | 20 000 |
| – கிளை - கிரயத்தில் | 24 000 |
| – கிளைக்கனுப்பிய வழியில் நின்ற சரக்கு | 12 000 |

(ii) தலைமைக் காரியாலயத்தால் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதுடன் கிளைக்கு கிரயத்துடன் 20% சேர்த்து மாற்றப்படுகின்றது.

(iii) 31 டிசம்பர் 2017 இல் கிளையானது தலைமைக் காரியாலயத்திற்கு ரூ. 10 000 ஐ மாற்றியுள்ள போதும் இதுதொடர்பில் அத்திகதியில் தலைமைக் காரியாலயத்தின் கணக்குப் புத்தகத்தில் எதுவித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

**வேண்டப்படுவது :**

31 டிசம்பர் 2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவனத்தின் இணைந்த மற்றும் தலைமைக் காரியாலயம், கிளை ஆகியவற்றுக்கான வியாபார இலாப நட்டக் கணக்குகள்

*(15 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව/
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை – 2016 (2018)
Limited / Open Competitive Examination for Recruitment to Class III of the
Sri Lanka Accountants' Service -2016 (2018)

(02) நிதிக் கணக்கியல் - வினாத்தாள் II
Financial Accounting - Paper II

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

எல்லா வினாக்களுக்கு விடை எழுதுக.

1. அனோஜன், வினோஜன் மற்றும் சந்திரன் ஆகியோர் வணிகமொன்றின் பங்காளர் ஆவர். இலாப பகிர்வுக்கு முன்னர் 31 மார்ச் 2017 இல் உள்ளவாறு வணிகத்தின் சுருக்கப்பட்ட கணக்கு மீதிகள் கீழே தரப்படுகின்றன.

| | வரவு ரூ. ('000) | செலவு ரூ. ('000) |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் ............................ | 1 750 | – |
| நடைமுறைச் சொத்துக்கள் ........................................ | 550 | – |
| பங்காளர் மூலதனக் கணக்குகள் 01.04.2016 இல் உள்ளவாறு | | |
| - அனோஜன் .................................................. | – | 600 |
| - வினோஜன் .................................................. | – | 400 |
| - சந்திரன் ...................................................... | – | 400 |
| பங்காளர் நடைமுறைக் கணக்குகள் | | |
| - அனோஜன் .................................................. | 40 | – |
| - வினோஜன் .................................................. | – | 180 |
| - சந்திரன் ...................................................... | – | 100 |
| ஆண்டுக்கான இலாபம் ............................................ | – | 570 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் .................................... | – | 90 |
| | **2 340** | **2 340** |

**மேலதிக தகவல்கள் ;**

(i) 31 டிசெம்பர் 2016 இல் வணிகத்திலிருந்து சந்திரன் விலகும் வரை அனோஜன், வினோஜன், சந்திரன் ஆகியோர் இலாப நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்துள்ளனர்.

(ii) 01 ஜனவரி 2017 இல் இருந்து அனோஜனும் வினோஜனும் இலாப நட்டத்தினை முறையே 2 : 1 எனும் விகிதத்தில் பகிர்ந்து தொடர்ந்து நடாத்த சம்மதித்துள்ளனர்.

(iii) பங்குடைமை ஒப்பந்தத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அம்சங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | 31 டிசெம்பர் 2016 வரை | 01 ஜனவரி 2017 இல் இருந்து |
|---|---|---|
| பங்காளர்களின் மாதாந்த சம்பளம் (ரூ.) | அனோஜன் : 40 000<br>வினோஜன் : 30 000<br>சந்திரன் : 20 000 | அனோஜன் : 50 000<br>வினோஜன் : 50 000 |
| மூலதன வட்டி | ஆரம்ப மீதி அடிப்படையில் வருடாந்தம் 10% ஆகும். | உரித்துடையவர்களல்லர் |
| மாதாந்த தொலைபேசிக் கொடுப்பனவு (ரூ.) | உரித்துடையவர்களல்லர். | ஒவ்வொருவருக்கும் 5 000 வீதம் |

(iv) மூலதன மீதிகளுக்கான வட்டியானது இன்னமும் செலுத்தப்படவில்லை.

(v) பங்காளர்களுக்கான சம்பளமானது ஒரு மாத நிலுவையில் செலுத்தப்படும். எனினும் தவறுதலாகப் பழைய பங்குடைமை ஒப்பந்தத்தின்படி பெப்ரவரி 2017 வரை சந்திரன் உட்பட எல்லாப் பங்காளர்களுக்கும் அவர்களது சம்பளமானது செலுத்தப்பட்டுள்ளது.

[பக் 2 ஐப் பார்க்க.

(vi) பங்குடைமையில் இருந்து சந்திரன் விலகும்பொழுது பங்குடைமையின் நன்மதிப்பானது ரூ. 600 000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நன்மதிப்பானது சொத்துக்களாக இனங்காணப்படுவதற்குப் பதிலாக பங்காளரின் மூலதனக் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு இணங்கப்பட்டுள்ளது.

(vii) சந்திரன் ரூ. 20 000 கிரயப் பெறுமதியும் ரூ. 30 000 விற்பனை பெறுமதியும் உடைய பொருட்களை வணிகத்திலிருந்து எடுத்துச் சென்றுள்ளார். இந்த மாதிரியான விற்பனைகள் ஒப்பந்தத்தின் பிரகாரம் வழமையான விற்பனைகளாகக் கருதப்படும். எனினும் இது தொடர்பில் இன்னமும் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(viii) இவ் வணிகமானது அனோஜனிற்குச் சொந்தமான கட்டடத்தில் நடாத்தப்படுவதுடன் கட்டடத்தைப் பயன்படுத்துவதற்காக மாதாந்தம் வாடகையாக ரூ. 40 000 செலுத்துவதற்கு இணங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் ஜனவரி 01 இல் ஒரு வருட வாடகையானது முற்பணமாகச் செலுத்தப்படுவதுடன் பின்னர் முழுக் கொடுப்பனவும் செலவாக இனங்காணப்படும்.

(ix) சந்திரன் வணிகத்திலிருந்து விலகிய தினத்தில் ரூ. 200 000 காசாக அவருக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன் அவருக்கு மிகுதித் தொகையானது 6 மாத காலத்தில் வட்டி இல்லாமல் கொடுத்துத் தீர்ப்பதற்கு இணங்கப்பட்டுள்ளது. சந்திரனுக்குச் செலுத்திய தொகையானது தவறுதலாக செலவாக இனங்காணப்பட்டுள்ளது.

(x) வினோஜனுக்கு, பொருட்களை உற்பத்தி செய்வதிலுள்ள அவரது நிபுணத்துவத்திற்காக வருடாந்தம் ரூ. 100 000 விசேட கொடுப்பனவாகச் செலுத்தப்படும். இவ்வருடத்தில் அவருக்கு ரூ. 70 000 செலுத்தப்பட்டுள்ளதுடன் அத்தொகையானது அவரது நடைமுறைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வேறு எவ்வித பதிவுகளும் செய்யப்படவில்லை.

(xi) இவ்வருடத்தில் ரூ. 110 000 பெறுமானத்தேய்வாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இது ரூ. 90 000 ஆல் குறைவானதாக காணப்படுகின்றது.

(xii) பங்காளர்களுக்குரிய தொலைபேசிக் கொடுப்பனவானது செலுத்தப்படாதுள்ளதுடன் இனங்காணப்படாததாகவும் உள்ளது.

(xiii) 31.03.2017 இல் உள்ளவாறான இருப்புக்களின் தேறிய தேறக்கூடிய பெறுமதியானது ரூ. 60 000 ஆகும். எனினும் நடைமுறைச் சொத்துக்களுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூ. 70 000 இருப்பானது கிரயத்தில் இனங்காணப்பட்டுள்ளது.

(xiv) இவ்வருடத்தில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, பங்காளர்களால் செய்யப்பட்ட ஏனைய காசுப் பற்றுக்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| | |
|---|---|
| அனோஜன் | ரூ. 30 000 |
| வினோஜன் | ரூ. 25 000 |
| சந்திரன் | ரூ. 20 000 |

(xv) பங்குடைமை ஒப்பந்தத்தின்படி அனோஜன் தனது நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட ஆரம்ப வரவு மீதித் தொகை ரூ. 40 000 ஐ காசாகச் செலுத்தத் தீர்மானித்துள்ளார். எனினும் இத்தொகையானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

(xvi) ரூ. 45 000 காசு மீதி உள்ளடங்கலாக 01.04.2016 இல் உள்ளவாறான மொத்த நடைமுறைச் சொத்துக்கள் ரூ. 480 000 ஆகும். 31.03.2017 இல் உள்ளவாறான காசு மீதி ரூ. 70 000 ஆக இருந்தது.

(xvii) 01.04.2016 இல் உள்ளவாறான மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் ரூ. 125 000 ஆக இருந்தது.

(xviii) வருடம் பூராகவும் இலாபங்களானது சமமாக ஏற்பட்டதெனக் கருதுக.

**வேண்டப்படுபவை ;**

(1) இவ்வருடத்துக்கான இலாபமானது திருத்தப்பட்டுள்ள முறையைக் காட்டுவதற்கான கூற்று

(2) 31.12.2016 இல் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதி மற்றும் 31.03.2017 இல் முடிவடைந்த மூன்று மாத காலப்பகுதிக்கான தனித்தனியான பகிர்வுக் கணக்குகள்

(3) 31. 03. 2017 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

(4) பங்காளர் நடைமுறைக் கணக்குகள்

(5) பங்காளர் மூலதனக் கணக்குகள்

(6) 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்

*(40 புள்ளிகள்)*

[பக் 3 ஐப் பார்க்க.

**2.** 'Best' மனுபக்சரர்ஸ் நிறுவனத்தின் 31.03.2017 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| கணக்குகளின் தலைப்பு | வரவு ரு. ('000) | செலவு ரு. ('000) |
|---|---|---|
| காணி | 5 000 | – |
| கட்டடங்கள் | 4 000 | – |
| மோட்டார் வாகனங்கள் | 2 000 | – |
| இயந்திரங்கள் | 7 000 | – |
| திரண்ட பெறுமானத் தேய்வு - கட்டடங்கள் | – | 200 |
| - மோட்டார் வாகனங்கள் | – | 800 |
| - இயந்திரங்கள் | – | 2 500 |
| வருமதிக் கணக்குகள் | 900 | – |
| இருப்புக்கள் - மூலப்பொருட்கள் | 370 | – |
| - முடிவுப்பொருட்கள் | 620 | – |
| - நடைமுறை வேலைகள் | 200 | – |
| சம்பளங்கள் - நேரில் (தொழிற்சாலை) | 5 450 | – |
| சம்பளங்கள் - நேர் (தொழிற்சாலை) | 12 300 | – |
| சம்பளங்கள் - அலுவலகம் | 2 080 | – |
| கட்டடப் பராமரிப்பு | 200 | – |
| இறைவரிக் கட்டணம் | 30 | – |
| மோட்டார் வாகனக் காப்புறுதி | 40 | – |
| இயந்திரங்கள் திருத்தம் | 120 | – |
| மேலதிக நேரக் கொடுப்பனவு (தொழிற்சாலை ஊழியர்களுக்கான) | 4 000 | – |
| மூலப்பொருட்கள் கொள்வனவு | 25 000 | – |
| சம்பள முற்பணங்கள் | 40 | – |
| EPF கொடுப்பனவுகள் | 4 800 | – |
| ETF கொடுப்பனவுகள் | 590 | – |
| மீளப் பெறப்பட்ட சம்பள முற்பணங்கள் | – | 340 |
| கொடுக்கப்பட்ட சம்பள முற்பணங்கள் | 350 | – |
| EPF கொடுப்பனவு சென்மதி | – | 325 |
| ETF கொடுப்பனவு சென்மதி | – | 53 |
| மோட்டார் வாகன பாவனைச் செலவுகள் | 950 | – |
| தொழிற்சாலை சக்தி மற்றும் எரிபொருள் | 800 | – |
| மின்சாரம் | 600 | – |
| தொடர்பாடல் செலவுகள் | 280 | – |
| செலுத்திய இறை (Royalty) | 2 500 | – |
| சென்மதி கணக்குகள் | – | 482 |
| பொதியிடல் மூலப்பொருட்கள் | 80 | – |
| கூறப்பட்ட மூலதனம் | – | 25 000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | – | 22 000 |
| விற்பனை | – | 30 000 |
| காசுமீதி | 1400 | – |
| | **81 700** | **81 700** |

/பக் 4 ஐப் பார்க்க.

மேலதிக தகவல்கள் ;

(i) 31 மார்ச் 2017 இலுள்ளவாறான இருப்புக்கள் (நடைமுறை வேலையானது மூலக்கிரயத்தில் அளவிடப்படுகிறது.)

- முடிவுப் பொருட்கள் - ரூ. 410 000
- நடைமுறை வேலைகள்- ரூ. 540 000
- மூலப்பொருட்கள் - ரூ. 130 000

(ii) கட்டடத்தின் 20% பகுதியானது அலுவலகத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

(iii) எல்லா சம்பளங்களும் ஒவ்வொரு மாத முடிவுக்கு முன்னர் செலுத்தப்படுகிறது. EPF மற்றும் ETF பங்களிப்புக்கள் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படுகின்றது. 2017 மார்ச் மாதத்துக்கான சம்பளப் பட்டியலின் சுருக்கமானது கீழே தரப்பட்டுள்ளது. 2017 மார்ச் மாதத்துக்கான சம்பளச் செலவாக தேறிய கொடுப்பனவு மாத்திரம் இனங்காணப்பட்டுள்ளது.

| | தொழிற்சாலை ரூ. ('000) | அலுவலகம் ரூ. ('000) |
|---|---|---|
| மொத்த சம்பளங்கள் | 1 500 | 200 |
| கழிப்பனவுகள் | | |
| - EPF | 150 | 20 |
| - சம்பள முற்பணங்கள் | 25 | – |
| தேறிய கொடுப்பனவு | **1325** | **180** |
| வேலை கொள்வோர் பங்களிப்பு | | |
| - EPF | 225 | 30 |
| - ETF | 45 | 6 |

(iv) சம்பள முற்பணக் கணக்கானது 01.04.2016 இல் உள்ளவாறான மீதியைக் காட்டுகின்றது.

(v) EPF கொடுப்பனவு சென்மதி மற்றும் ETF கொடுப்பனவு சென்மதி கணக்குகள் 01.04.2016 இல் உள்ளவாறான மீதிகளைக் காட்டுகின்றன.

(vi) மொத்த விற்பனைப் பெறுமதி மீதான 10% இறையானது உற்பத்தித் தொழில் நுட்பத்துக்காகச் செலுத்தப்பட வேண்டுமென வேண்டப்பட்டுள்ளது.

(vii) மோட்டார் வாகனம் தொடர்பான 50% செலவுகள் உற்பத்திக் கிரயமாக இனங்காணப்படல் வேண்டும்.

(viii) தொடர்பாடல் செலவுகள் அனைத்தும் நிர்வாகச் செலவாகக் கருதப்படும். 75% மின்சாரங்கள் தொழிற்சாலைக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

(ix) வருடத்துக்கான பெறுமானத்தேய்வு பின்வருமாறு செய்யப்படல் வேண்டும்.

கட்டடங்கள் - ரூ. 100 000
இயந்திரங்கள் - ரூ. 400 000
மோட்டார் வாகனங்கள் - ரூ. 300 000

**வேண்டப்படுபவை ;**

(1) 31 மார்ச் 2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி கணக்கு

(2) பின்வருவன தொடர்பில் சீராக்கங்களைப் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

EPF மற்றும் ETF

சம்பள முற்பணங்கள்

இறைகள் தொடர்பான செலவுகள்

பெறுமானத்தேய்வு

(3) 31 மார்ச் 2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான சம்பள முற்பணக் கணக்கு

*(20 புள்ளிகள்)*

[பக் 5 ஐப் பார்க்க.

**3.** அரசாங்கக் கணக்காளர் குழுவொன்றினால் நலன்புரிச் சங்கமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தில் 800 அங்கத்தவர்கள் இருப்பதுடன் அங்கத்தவர் ஒருவருக்கான மாதாந்த சந்தா ரூ. 100 ஆகும். இச்சங்கத்தினால் தேநீர்சாலை ஒன்றும் இயக்கப்படுகிறது. இச்சங்கத்தின் 31 மார்ச்சில் உள்ளவாறான சொத்துக்கள், பொறுப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 31.03. 2017<br>ரூ. | 31.03.2016<br>ரூ. |
|---|---|---|
| தளபாடங்கள் | 65 000 | 65 000 |
| தொலைக்காட்சிப்பெட்டி | 40 000 | 40 000 |
| வங்கி மீதி - சங்கம் | 61 500 | 126 500 |
| வங்கியிலுள்ள நிலையான வைப்புக்கள் | 2 500 000 | 2 000 000 |
| சேமிப்புக் கணக்கு மீதி | 24 000 | 10 000 |
| வங்கி மீதி - தேநீர்சாலை | 607 000 | (76 000) |
| வருமதியான சந்தாக்கள் | 3 000 | 8 000 |
| உணவுப் பொருட்கள் இருப்பு | 2 100 000 | 1 750 000 |
| சேவை விநியோகத்தகர்களுக்கான சென்மதி | 12 000 | 9 000 |
| முற்பணமாகப் பெற்ற சந்தாக்கள் | 6 000 | – |

**மேலதிக தகவல்கள் ;**

(i) நிலையான வைப்புக்களானது வருடாந்தம் புதுப்பித்தல் அடிப்படையில் நடைமுறை வட்டி வீதத்தில் பராமரிக்கப்படுகின்றன. வைப்பானது 01.01.2016 இல் முதிர்ச்சியடைந்த பின்னர் அது 12% வருடாந்த வட்டியில் ரூ. 2 மில்லியன் தொகையுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மற்றுமோர் ரூ. 500 000 ஆனது 01.01.2017 இல் வைப்பில் இடப்பட்டுள்ளதுடன் இக்காலப் பகுதியில் உள்ள வட்டி வீதம் 13% ஆக இருந்தது. வங்கியானது, வட்டியினை வருடாந்த அடிப்படையில் கணக்கில் இடுகிறது. எனினும் சங்கமானது 01.01.2016 இலிருந்து வட்டி வருமானத்தை இன்னமும் இனங்காணவில்லை.

(ii) சேமிப்புக் கணக்குக்கான புத்தகமானது 31.03.2017 இலுள்ளவாறான ரூ. 28 500 மீதியினை காட்டுகிறது. மேலும் சங்கமானது வைப்புக்களையும் பற்றுக்களையும் (withdrawals) சரியாக கணக்கு வைத்துள்ளது.

(iii) தேநீர்சாலை தொடர்பான எல்லா பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் தேநீர்சாலைக்காக பராமரிக்கப்பட்ட வங்கிக் கணக்கினூடாகச் செய்யப்பட்டுள்ளன. இக்கணக்குத் தொடர்பான சுருக்கம் பின்வருமாறு;

| | ரூ. |
|---|---|
| 01.04.2016 இலுள்ளவாறான மீதி | (76 000) |
| விற்பனைகள் | 14 000 000 |
| சங்கத்திலிருந்து பெற்ற காசு | 85 000 |
| பொருள் விநியோகத்துக்கான கொடுப்பனவுகள் | (8 000 000) |
| சம்பளங்கள் | (1 351 300) |
| கட்டட வாடகை | (240 000) |
| உபகரணங்கள் மற்றும் பாத்திரங்களுக்கான வாடகை | (600 000) |
| மின்சாரம் | (135 000) |
| நீர் | (12 700) |
| தொலைபேசிக் கட்டணங்கள் | (63 000) |
| சங்கத்துக்கு மாற்றியது | (3 000 000) |
| 31.03.2017 இல் உள்ளவாறான மீதி | 607 000 |

(iv) தேநீர்சாலை வங்கிக்கூற்றுக்களின்படி வங்கிக் கட்டணங்கள் மற்றும் வட்டி ஆகியவைகளின் தொகை ரூ. 4050 எனத் தெரிய வந்துள்ளது.

/பக் 6 ஐப் பார்க்க.

(v) நலன்புரிச் சங்கத்தின் வங்கிக் கணக்கின் சுருக்கமானது கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூ. |
|---|---|
| 01.04.2016 இலுள்ளவாறான மீதி ............................. | 125 500 |
| தேநீர்சாலையில் இருந்து பெற்ற காசு ...................... | 3 000 000 |
| பெறப்பட்ட சந்தா .............................. | 971 000 |
| சேமிப்பு கணக்கில் இட்ட வைப்புக்கள் ............................... | (14 000) |
| நிர்வாகச் செலவுகள் ............................................. | (115 000) |
| நிலையான வைப்புக்கள் .................................................... | (500 000) |
| நலன்புரிச் செலவுகள் ............................................ | (3 316 500) |
| புதினப் பத்திரிகைகள் ........................................ | (5 500) |
| தேநீர்சாலைக்கு மாற்றிய காசு ........................... | (85 000) |
| 31.03.2017 இல் மீதி ....................................... | **61 500** |

(vi) தளபாடங்களும் தொலைக்காட்சிப் பெட்டியும் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்பத்திலிருந்து பெறுமானத்தேய்வு செய்யப்படவில்லை. தளபாடங்கள், தொலைக்காட்சிப் பெட்டியின் நியாயப் பெறுமதியானது முறையே அதன் கிரயத்தின் 70% மற்றும் 30% என மதிப்பீடு செய்யப்பட்டது. சங்கமானது அவைகளை அவற்றின் நியாயப் பெறுமதியில் இனங்காண்பதற்கு தீர்மானித்துள்ளது.

**வேண்டப்படுபவை ;**

(1) 31 மார்ச் 2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தேநீர்சாலையின் இலாபம் அல்லது நட்டத்தைக் காட்டும் கூற்று

(2) 31 மார்ச் 2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சங்கத்தின் வருமானக் கூற்று

(3) சங்கத்தின் திரண்ட நிதியானது 31.03.2016 இலிருந்து 31.03.2017 வரை எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பதைக் காட்டும் கூற்று

*(20 புள்ளிகள்)*

**4.** பின்வரும் தகவல்கள் வரையறுத்த 'என்றஸ்ற்' கொன்ஸ்றக்சன்ஸ் (Entrust Construction Ltd) நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட கட்டட ஒப்பந்தம் தொடர்பானதாகும்.

| | ரூ. ('000) |
|---|---|
| வழங்கப்பட்ட ஒப்பந்த விலை ............ | 5 000 000 |
| மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தக் கிரயம் ....................... | 3 600 000 |

இந்த ஒப்பந்தம் தொடர்பான ஏனைய தகவல்கள் வருமாறு

| | 31.03.2016<br>ரூ. ('000) | 31.03.2017<br>ரூ. ('000) |
|---|---|---|
| இதுவரை ஏற்பட்ட கிரயம் .......................................... | 1 300 000 | 2 650 000 |
| சான்றுபடுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதி ..................... | 1 750 000 | 3 450 000 |
| பெற்ற செயற்பாட்டுக் கொடுப்பனவு .............................. | 800 000 | 2 000 000 |
| வருமானத்தின் மீது பிடிக்கப்படும் தொகை ...................... | 10% | 10% |

ஒப்பந்தத்தின் இரு தரப்பினரும் ஒப்பந்த விலையை 31.12.2016 இலுள்ளவாறு 5.4 பில்லியன் ஆக மாற்றியமைக்க இணங்கியுள்ளனர். திருத்தப்பட்ட கிரய மதிப்பீடுகளானது கட்டடத்தைப் பூர்த்தி செய்வதற்கு மேலதிக கிரயமாக ரூ. 2 பில்லியன் ஏற்படுமென வெளிப்படுத்தியுள்ளது.

**வேண்டப்படுபவை ;**

(1) 31.03.2017 மற்றும் 31.03.2016 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான கட்டட நிர்மாண ஒப்பந்தக் கணக்கு ஒப்பந்த வருமதி கணக்கு மற்றும் பிடிக்கப்படும் பணத்தொகை கணக்கு

(2) 31.03.2017 மற்றும் 31.03.2016 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்களின் பிரித்தெடுத்த பகுதி

*(10 புள்ளிகள்)*

[பக் 7 ஐப் பார்க்க.

**5.** கீழே தரப்பட்டுள்ளவைகள் 31.03.2017 இல் முடிவடைந்த காலப்பகுதியில் தலைமையகம் மற்றும் கிளை ஆகியவற்றுக்கு இடையிலான கொடுக்கல்வாங்கல்களின் விபரங்கள் ஆகும்.

| | கிரயம் ரூ. ('000) | விற்பனை விலை ரூ. ('000) |
|---|---|---|
| 01.04.2016 இலுள்ளவாறான கிளையில் உள்ள இருப்பு | 10 000 | 15 000 |
| தலைமையகத்தால் கிளைக்கு அனுப்பிய பொருட்கள் | 120 000 | 180 000 |
| கிளையினால் திருப்பி அனுப்பிய பொருட்கள் | 5 000 | 7 500 |
| கிளையினால் செய்யப்பட்ட விற்பனைகள் | – | 135 000 |
| வாடிக்கையாளர்களால் கிளைக்கு திருப்பி அனுப்பப்பட்ட பொருட்கள் | 2 000 | 3 000 |
| வாடிக்கையாளர்களால் தலைமையகத்துக்கு திருப்பி அனுப்பப்பட்ட பொருட்கள் | 4 000 | 6 000 |
| 31.03.2017 இலுள்ளவாறு கிளையிலுள்ள இருப்புக்கள் | 20 000 | 30 000 |

**வேண்டப்படுபவை ;**

(மையப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கொள்க.)

(1) 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான கிளை இருப்பு கணக்கு

(2) 31.03.2017 இல் முடிவடைந்த காலத்தில் கிளை ஈட்டிய இலாபம்

*(10 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2018)**

Limited / Open Competitive Examination for Recruitment to Class III of the Sri Lanka Accountants' Service - 2016 (2018)

**(03) செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல்**
Cost and Management Accounting

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

**1.** அரச திணைக்களம் ஒன்று தனிப்பட்ட சேவைகளிற்கான கிரயங்களை அடையாளம் காண்பதற்கு வேலைக் கிரயமிடல் (Job Costing) முறையினை பயன்படுத்துகிறது. ஒவ்வொரு வாடிக்கையாளர் (Client) சேவைக்குமான மேந்தலைக் கிரயத்தினை சாட்டுதல் செய்வதற்கான அடிப்படையாக ஊழியர்களால் வேலை செய்யப்பட்ட மணித்தியாலங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

முகாமையானது ஊழியர்களை சிரேஷ்ட ஊழியர், கனிஷ்ட ஊழியர் என வேறுப்படுத்தி மேந்தலை சாட்டுதல் முறையினை மாற்றியமைக்க தீர்மானித்துள்ளது. கனிஷ்ட ஊழியர்களுடன் ஒப்பிடும்போது சிரேஷ்ட ஊழியர்களுக்கான மணித்தியாலமொன்றிற்கான மேந்தலை வீதமானது 50 சதவீதம் கூடியதாக இருத்தல் வேண்டும்.

31 டிசம்பர் 2017 இல் முடிவடைந்த மாதத்திற்கான தகவல்கள் பின்வருமாறு

| | பாதிடப்பட்டது | உண்மையானது |
|---|---|---|
| சிரேஷ்ட உழியர்களின் மொத்த மணித்தியாலங்கள் | 15 000 | 20 000 |
| கனிஷ்ட ஊழியர்களின் மொத்த மணித்தியாலங்கள் | 40 000 | 45 000 |
| மாதாந்த மேந்தலைகள் (ரூ. மில்லியன்) | 8.75 | 11.25 |

**வேண்டப்படுபவை:**

(1) (i) சிரேஷ்ட ஊழிய மணித்தியாலம்
(ii) கனிஷ்ட ஊழிய மணித்தியாலம்

ஆகியவற்றிற்கு பிரயோகிக்கக் கூடிய மேந்தலை உறிஞ்சல் வீதத்தினை 31 டிசம்பர் 2017 இல் முடிவடைந்த மாதத்திற்கு கணிக்குக. *(05 புள்ளிகள்)*

(2) முன்பு தீர்மானிக்கப்பட்ட வீதத்தினை பயன்படுத்தி உறிஞ்சப்பட்ட மேந்தலையானது அதே காலப்பகுதியில் உண்மையாக ஏற்பட்ட மேந்தலையிலிருந்து வேறுபடுவது ஏன் என்பதைச் சுருக்கமாக விளக்குக. *(04 புள்ளிகள்)*

(3) பெரும்பாலான வர்த்தக நிறுவனங்களானது மரபுரீதியான மேந்தலை ஒதுக்குதல் முறையில் காணப்படும் பிரதிகூலங்களினை நிவர்த்தி செய்யும் பொருட்டு செயற்பாட்டு அடிப்படையிலான கிரய முறையினை (Activity Based Costing- ABC) பிரயோகிக்க விரும்புகின்றனர்.
அரச நிறுவனங்களிற்கு செயற்பாட்டு அடிப்படையிலான கிரய முறையினை (ABC) பிரயோகிப்பதனால் ஏற்படும் **மூன்று** அனுகூலங்களைக் குறிப்பிடுக. *(06 புள்ளிகள்)*

*(மொத்தம் 15 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

**2.** "கிறீன் வெஜிரபிள் கார்டனர்" (Green Vegetable Gardener-GVG)) நிறுவனமானது மலைநாட்டில் மரக்கறி பயிர்ச்செய்கையை செய்கின்றது. அதன் முகாமையாளர் பின்வரும் தற்போதைய பருவத்திற்கான தகவல்களை வழங்கியுள்ளார்.

| | உருளைக்கிழங்கு | கோவா | லீக்ஸ் | கரட் |
|---|---|---|---|---|
| பயிர்ச்செய்கைக்கான பரப்பு (ஏக்கர்) | 25 | 20 | 30 | 25 |
| ஏக்கர் ஒன்றிற்கான அறுவடை (மெற்றிக் தொன்) | 10 | 15 | 08 | 12 |
| மெற். தொன் ஒன்றிற்கான விற்பனை விலை (ரூ. '000) | 80 | 60 | 75 | 100 |
| ஏக்கருக்கான மாறும் கிரயம் (ரூ.'000) | | | | |
| உரங்கள் | 100 | 75 | 40 | 75 |
| விதைகள் | 25 | 25 | 30 | 35 |
| கிருமிநாசினி | 75 | 25 | 30 | 55 |
| நேர் சம்பளம் | 160 | 220 | 300 | 375 |

பருவமொன்றிற்கான மொத்த நிலையான கிரயம் ரூ. 1 500 000 ஆகும். போதுமான சந்தைச் சேவையினை வழங்கும் நோக்கத்திற்காக GVG ஆனது ஒவ்வொரு பருவத்திலும் அவ் ஒவ்வொரு மரக்கறி வகையிலும் ஆகக் குறைந்தது 60 மெற்றிக் தொன்களை உற்பத்தி செய்தல் வேண்டும்.

**வேண்டப்படுபவை:**

(1) இந்த உற்பத்தி திட்டத்தின்படி "உத்தம உற்பத்தி திட்டம்" மற்றும் "இலாபம் அல்லது நட்டம்" *(16 புள்ளிகள்)*

(2) சமப்பாட்டுப் புள்ளி பகுப்பாய்வின் **இரண்டு** மட்டுப்படுத்தல்கள் *(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

**3.** 'சிலாபம் ஆதன அபிவிருத்தியாளர்' (Chilaw Property Developer - CPD) கம்பனியானது தமது வாடிக்கையாளர்கள் சார்பில் ஆதனங்களை மதிப்பிடல், விளம்பரப்படுத்தல், விற்பனை செய்தல் ஆகியவைகளைச் செய்கின்றது. இக்கம்பனியானது இவ்வியாபாரத்தில் மிகக்குறைந்த இருந்துள்ளதுடன் இது 2018 இற்கான முதல் 4 மாதத்திற்கான காசுப் பாதீட்டினைத் தயாரிக்கிறது. வதிவிட ஆதனங்களிற்கான எதிர்பார்க்கப்பட்ட விற்பனையானது பின்வருமாறு

| மாதம் | 2017 | 2018 | | | |
|---|---|---|---|---|---|
| | டிசம்பர் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் |
| விற்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை | 10 (உண்மையானது) | 15 | 20 | 25 | 30 |

ஒவ்வொரு ஆதனத்தினதும் சராசரி விலை ரூ. 5 மில்லியன் ஆக இருப்பதுடன் விற்கப்படும் ஒவ்வொரு ஆதனத்தின் பெறுமதியில் 5% தமது சேவைக் கட்டணமாக CPD யால் அறவிடப்படுகிறது. CPD ஆனது 2 சதவீதத்தினை விற்பனை செய்யும் மாதத்திலும் மிகுதி 3 சதவீதத்தினை விற்பனையைத் தொடர்ந்துவரும் மாதத்திலும் பெறுகிறது. கம்பனியானது 10 ஊழியர்களை வேலையில் சேர்த்துள்ளதுடன் அவர்களிற்கான கொடுப்பனவானது மாதாந்த அடிப்படையில் செய்யப்படுகிறது. ஊழியருக்கான சராசரி சம்பளமானது மாதாந்தம் ரூ. 10 000 ஆகும். குறிப்பிட்ட மாதமொன்றில் 20 இற்கும் அதிகமான ஆதனங்கள் விற்பனை செய்யப்படுமெனின் ஒவ்வொரு ஊழியர்களுக்கும் மேலதிகமாக விற்பனை செய்யப்பட்ட ஒவ்வொரு ஆதனத்திற்கும் 50% மிகையூதிய சம்பளம் அந்த மாதத்தில் செலுத்தப்படும்.

மாறும் கிரயங்களானது விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு ஆதனத்தின் பெறுமதியிலும் 1% ஏற்படுவதுடன் அவைகள் விற்பனை செய்யப்படும் மாதத்தில் செலுத்தப்படும். மாதாந்த பெறுமானத் தேய்வு ரூ. 100 000 உட்பட மாதாந்த மொத்த நிலையான மேந்தலை ரூ. 500 000 ஆனது அவைகள் ஏற்படும் மாதத்திலேயே செலுத்தப்படுகிறது. CPD ஆனது கடந்த வருடம் 3 வருட கால நீடிப்புடனான (grace period) ரூ. 10 மில்லியன் கடனொன்றை வருடாந்தம் 15% வட்டியில் பெற்றுள்ளது. ஆனால் கடன் வட்டியானது மாதாந்தம் செலுத்தப்படல் வேண்டும்.

கம்பனியின் வருமானவரி 30% ஆகவும் பெறுமதிசேர் வரி 15% ஆகவும் காணப்படுகிறது. 2017 இற்கான ரூ. 2.5 மில்லியன் வருமானவரிப் பொறுப்பானது 2018 ஜனவரியில் செலுத்தப்படல் வேண்டும். அதே மாதத்தில் CPD ஆனது மேலதிகமாகவுள்ள ரூ. 2 மில்லியன் தேறிய புத்தக பெறுமதி கொண்ட வாகனங்களை ரூ. 2.3 இற்கு விற்பனை செய்யவுள்ளது. 2017 டிசம்பர் மாதம் காணப்பட்ட வங்கி மீதி மற்றும் காசு மீதி முறையே ரூ. 200 000 மற்றும் ரூ. 50 000 மேலதிகப் பற்று (overdraft) ஆகும்.

**வேண்டப்படுபவை:**

(1) மாதாந்த அடிப்படையில் 2018 ஜனவரியிலிருந்து ஏப்ரல் மாத காலத்திற்கான காசுப் பாதீட்டைத் தயாரிக்குக. *(10 புள்ளிகள்)*

(2) 30 ஏப்ரல் 2018 இல் 4 மாதம் முடிவடைந்த காலத்திற்கான பாதிடப்பட்ட வருமானக் கூற்று *(07 புள்ளிகள்)*

(3) காசுப் பாதீட்டிலிருந்தெழும் காசு மிகைகளை முதலீடு செய்வதற்கான வழிவகைகளைத் திட்டமிடும் போது CPD கருத்திற் கொள்ளவேண்டிய **மூன்று** காரணிகளைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

[பக். 3 ஐப் பார்க்க

**4.** லங்கா உற்பத்தியாளரின் உற்பத்திப் பொருளிற்கான செய்முறையுடன் தொடர்பானதாகும். இங்கு எல்லா மூலப்பொருட்களும் செய்முறையின் ஆரம்பத்தில் சேர்க்கப்படுவதுடன் 'முதல் - உள் - முதல் - வெளி' மதிப்பீட்டு முறை (FIFO) பயன்படுத்தப்படுகிறது.

செய்முறையிலுள்ள ஆரம்ப வேலைகள் : 3000 லீட்டர்கள் (மாற்றுக்கிரயம் தொடர்பாக 40%. இங்கு மொத்தமாக ரூ. 380 000 நேர் மூலப் பொருட்களிற்காக ரூ. 300 000, மாற்றல் கிரயமாக ரூ. 80 000) மதிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்பட்ட கிரயங்கள் : 20 000 லீட்டர் உள்ளீடுகளிற்கான ரூ. 1 600 000 நேர் மூலப்பொருட்கள் மாற்றல் கிரயமாக ரூ. 2 000 000

சாதாரண நட்டம் : காலமொன்றில் உள்ளீடுகளின் 10% செய்முறை முழுவதும் சீராக இடம்பெற்றது. எல்லா நட்டங்களையும் லீட்டர் ஒன்றிற்கு ரூ. 150 விற்க முடியும்.

உண்மையான வெளியீடு : இச்செய்முறையிலிருந்து 16 000 லீட்டர்கள் முடிவுப் பொருள் களஞ்சியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

செய்முறையிலுள்ள இறுதி வேலைகள் : 5000 லீட்டர்கள் (மாற்றக்கிரயம் தொடர்பாக 30% முடிக்கப்பட்டுள்ளது.)

**வேண்டப்படுவது :**

கடந்த மாதத்திற்கான செய்முறைக் கணக்கினை ரூபா பெறுமதியிலும் லீட்டரிலும் தயாரிக்குக.

*(10 புள்ளிகள்)*

**5.** (a) காலி வியாபார நிறுவனமானது டிசெம்பர் 2017 இல் 5000 கிலோகிராம் மூலப்பொருட்களை கொள்வனவு செய்தது. டிசெம்பர் மாத ஆரம்பத்திலும் இறுதியிலும் காணப்பட்ட சரக்கிருப்பு மட்டமானது முறையே 1000 கிலோ கிராம் மற்றும் 800 கிலோ கிராம் ஆகும். உற்பத்தி அலகொன்றிற்கான நியம மூலப்பொருட்களின் தேவைப்பாடானது 5 கிலோ கிராம் ஆகும். டிசெம்பர் மாதத்திற்கான நேர் ஊழியக் கிரயமானது 6000 நேர் ஊழிய மணித்தியாலங்களிற்காக செலுத்திய நேர் ஊழியக்கிரயம் ரூ. 600 000 ஆகும். அலகொன்றிற்கான நியம தேவைப்படும் மணித்தியாலம் 5.5 மணித்தியாலங்களாக இருப்பதுடன் ஊழிய மணித்தியாலமொன்றிற்கான நியம வீதம் ரூ. 110 ஆகும். டிசெம்பர் மாதத்தில் உண்மையான உற்பத்தி 1000 அலகுகள் ஆகும்.

**தேவைப்படுபவை**

(1) மூலப்பொருள் விலை முரண்

(2) மூலப்பொருள் பாவனை முரண்

(3) ஊழிய வீத (rate) முரண்

(4) ஊழிய வினைத்திறன் முரண் *(08 புள்ளிகள்)*

(b) "யாழ்ப்பாண ரேடர்ஸ்" இன் புத்தகங்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

| | பாதிட்டது | உண்மையானது |
|---|---|---|
| அலகு விற்பனை விலை (ரூ.) | 30 | 28 |
| விற்பனைகள் (அலகுகள்) | 9 000 | 12 000 |
| அலகொன்றிற்கான மாறும் கிரயம் (ரூ.) | 20 | 23 |
| மொத்த நிலையான கிரயம் (ரூ.) | 75 000 | 80 000 |

**தேவைப்படுபவை**

(1) விற்பனை விலை முரண்

(2) விற்பனை தொகை முரண்

(3) நிலையான மேந்தலைத் தொகை முரண்

*(07 புள்ளிகள்)*
*(மொத்தம் 15 புள்ளிகள்)*

**6.** (a) நிறுவனமொன்றின் இலக்குகளை (goals) அடைவதற்கு அடைவதற்கு ஊழியர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்திற்காக உருவாக்கப்படும் பாதீட்டு நிலையங்களிற்கான **மூன்று** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(b) பூச்சிய அடிப்படை பாதீடுகளினூடாக (Zero Base Budgeting) பொதுத்துறை நிறுவனங்களின் இலக்கினை (goal) எவ்வாறு அடைய முடியும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக. *(05 புள்ளிகள்)*

(c) பொதுத்துறை நிறுவனங்களில் செயற்பாட்டு அடிப்படை பாதீட்டு (Performance Based Budget) முறையை அறிமுகப்படுத்தத் தடையாகவுள்ள பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව (sic: සියලු ම හිමිකම් ඇවිරිණි)]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2018)**

Limited / Open Competitive Examination for Recruitment to Class III of the Sri Lanka Accountants' Service -2016 (2018)

**(04) கணக்காய்வு மற்றும் விசாரணைகள்**
Auditing and Investigations

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**1.** கணக்காய்வுத் திட்டத்தை (audit plan) அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் நிறுவனத்தையும் (entity) அதன் சூழலையும் புரிந்து கொள்வது கணக்காய்வாளருக்கு முக்கியமானதாகும்.

(i) கணக்காய்வாளர் நிறுவனம் தொடர்பில் போதுமானளவு புரிந்து கொள்ளலைப் பெற்றுக்கொள்ள வேண்டிய **நான்கு** பிரதான பரப்புக்களைப் (main areas) பட்டியலிடுக. *(06 புள்ளிகள்)*

(ii) ஒட்டுமொத்த கணக்காய்வுத் தந்திரோபாயங்களைத் (overall audit strategies) தயாரிக்கும்போது கணக்காய்வாளர் கருத்திற்கொள்ள வேண்டிய **ஐந்து** விடயங்களைப் பட்டியலிடுக. *(05 புள்ளிகள்)*

(iii) கணக்காய்வைத் திட்டமிடும்போது மோசடிகள் மற்றும் வழுக்கள் (frauds and errors) தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பைச் சுருக்கமாக விளக்குக. *(03 புள்ளிகள்)*

(iv) கணக்காய்வு இடரின் (Audit risk) கூறுகள் (components) **மூன்றினை** விளக்குக. *(06 புள்ளிகள்)*

**2.** கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டு முடிவுக்கு வரவேண்டுமென்பதில் போதுமானதும் பொருத்தமானதுமான தகவலாகக் கணக்காய்வாளரால் கணக்காய்வுச் சான்றுகள் (Audit evidence) பயன்படுத்தப்படுகின்றன.

(i) கணக்காய்வில் பெற்றுக்கொள்ளும் சான்றுகளின் நம்பகத்தன்மையைத் தீர்மானிக்கையில் கருத்திற் கொள்ளவேண்டிய **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(ii) கணக்காய்வுச் சான்றைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வாளர் ஒருவர் நிறைவேற்ற வேண்டிய கணக்காய்வு நடைமுறைகளைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) அரசாங்க நிறுவனங்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பில் காணப்படும் ஏற்பாடுகள் யாவை? *(06 புள்ளிகள்)*

(iv) கணக்காய்வு நோக்கத்திற்கான போதுமான தன்மை தொடர்பில் அகக் கணக்காய்வாளர்களது வேலையோடு ஒப்பிடும்போது அதனை மதிப்பிடுவதற்கு புறக் கணக்காய்வாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய **நான்கு** பரப்புகளைப் (areas) பட்டியலிடுக. *(04 புள்ளிகள்)*

**3.** (i) இலங்கையின் தொழில்சார் கணக்காளர்களுக்கான நெறிமுறை ஒழுங்குவிதிகளுடன் (code of ethics) இணங்கிச் செல்வதற்கு பட்டயக் கணக்காளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய **ஐந்து** அடிப்படைத் தத்துவங்களைக் (Fundamental Principles) குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) திரும்பத் திரும்ப நிகழும் கணக்காய்வுகள் (Recurring Audits) மீது ஒவ்வொரு காலப்பகுதிக்கும் புதிய பணிக்கமர்த்தல் கடிதத்தை (Engagement Letter) அனுப்பாமல் விடுவது தொடர்பில் கணக்காய்வாளர் தீர்மானிக்கலாம். எனினும், புதிய அல்லது மேலதிக பணிக்கமர்த்துதல் கடிதம் தேவைப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

புதிய அல்லது மேலதிக பணிக்கமர்த்துதல் கடிதம் தேவைப்படும் **நான்கு** சந்தர்ப்பங்களைப் பட்டியலிட்டுக் காட்டுக. *(06 புள்ளிகள்)*

(iii) மாற்றம் செய்யப்பட்ட அபிப்பிராயங்களின் (modified opinions) மூன்று வகைகளைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) கணக்காய்வு இடர் (Audit risk) மற்றும் வணிக இடர் (Business risk) ஆகியவற்றைச் சுருக்கமாக விளக்குக. *(03 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

**4.** நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள பின்வரும் உருப்படிகளின் மீது நிறைவேற்ற வேண்டிய கணக்காய்வு நடைமுறைகளைப் பட்டியலிடுக.

(i) குத்தகைகள் (Leases)
(ii) பிற்போடப்பட்ட வரிவிதிப்பு (Deferred taxation)
(iii) இருப்புக்கள் (Inventories)
(iv) முதலீடுகள் (Investments)

*(05 × 4 = 20 புள்ளிகள்)*

**5.** சுருக்கக் குறிப்புக்கள் எழுதுக.

(i) கடன் கிரயங்கள் (Borrowing Cost)
(ii) தொடர்புடைய தரப்பினர் (Related Party)
(iii) உறுதிப்படுத்தல் சோதனைகள் (Substantive Tests)
(iv) நிகழத்தக்க பொறுப்பு (Contingent Liability)
(v) நியாயமான பெறுமதி (Fair Value)

*(04 × 5 = 20 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

## இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2018)

## Limited / Open Competitive Examination for Recruitment to Class III of the Sri Lanka Accountants' Service -2016 (2018)


மூன்று மணித்தியாலங்கள்
Three hours

### (05) பொது விவேகம் மற்றும் கிரகித்தல்
### General Intelligence and Comprehension

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.



* விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.

**1 2 3 4**

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் மற்றும் ஐந்தாம் பக்கங்களிலும் எழுதுக.

....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

முக்கியம்:

* இவ்வினாத்தாள் 12 பக்கங்களில் (அ) பகுதியில் 02 வினாக்களையும் (ஆ) பகுதியில் 50 வினாக்களைக் கொண்டுள்ளது.
* எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய நேரம் மூன்று மணித்தியாலம் ஆகும்.
* மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.
* கணிப்பான்களைப் பயன்படுத்த முடியாது.
* உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டா.
* விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்
* **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**
* இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.
* தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண் மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டா.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பகுதி | பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|
| அ | 2 | 1 (i) | |
| | 3 | 1 (ii) | |
| | 4 | 2 | |
| ஆ | 5 | 1 - 10 | |
| | 6 | 11 - 15 | |
| | 7 | 16 - 23 | |
| | 8 | 24 - 30 | |
| | 9 | 31 - 35 | |
| | 10 | 36 - 40 | |
| | 11 | 41 - 45 | |
| | 12 | 46 - 50 | |
| மொத்தம் | | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி (அ) - கிரகித்தல்

எல்லா வினாக்களுக்குமான விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

**1.** (i) பின்வரும் பகுதியை வாசித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குச் **சுருக்கமாக** விடை எழுதுக.

2016 ஆம் ஆண்டின் சில மாதங்களிலும் அதேபோன்று 2017 ஆம் ஆண்டின் முதற்காலாண்டுப் பகுதியிலும் உயர்மட்ட பணவீக்கம் அவதானிக்கப்பட்டமைக்கு காலநிலையுடன் தொடர்புபட்ட இடையூறுகளின் மோசமான தாக்கம், வரிச் சீராக்கங்கள் மற்றும் உயர்வடைந்த பன்னாட்டு பண்ட விலைகள் என்பன முக்கிய காரணங்களாக விளங்கினவெனினும், பொருளாதாரத்தின் அதிகரிக்கின்ற கேள்வி அழுத்தங்கள் மையப் பணவீக்கம் தொடர்ந்தும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டமைக்குச் சான்றாக விளங்கின. வெளிநாட்டுத் துறை நிலுவைகளில் காணப்பட்ட அசைவுகள், பொருளாதாரத்தின் குறிப்பிட்ட துறைகளிலிருந்து இறக்குமதிக்கான உள்நாட்டுக் கேள்வி தொடர்ந்தும் காணப்பட்டமை, உள்நாட்டு உற்பத்திகளின் மட்டுப்படுத்தப்பட்டதுமான பலவீனமான வெளிநாட்டுக் கேள்வி, அதிகரித்த நேரடி முதலீட்டுப்பாய்ச்சல்களைக் கவர்ந்து கொள்ள நாடு தொடர்ந்தும் தவறி வருகின்றமை, அதேபோன்று குறிப்பாக, அரச பிணையங்கள் சந்தையில் உலகளாவிய வட்டி வீதங்கள் உயர்வடைந்து வருகின்றமையின் தாக்கம் என்பனவற்றைப் பிரதிபலிக்கின்றன. சுற்றுலா மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் அதேபோன்று தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பனவற்றில் முன்னேற்றங்கள் காணப்பட்ட போதும், இவ்வபிவிருத்திகள் தொடர்ந்தும் இரண்டாவதாண்டாக சென்மதி நிலுவையின் பற்றாக்குறைக்கு வழிவகுத்தன. ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி பெருமளவில் தலையிட்டமை இக்காலப்பகுதியில் செலாவணி வீதத்தில் பரந்தளவிற்கு உறுதியான தன்மையொன்றினைத் தோற்றுவித்தது. எனினும், அதன்பின்னர், அரச பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சலில் இருந்து தோன்றுகின்ற செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் மட்டுப்படுத்தப்பட்டமையின் மூலம் செலாவணி வீதம் சந்தை நிலையினைப் பிரதிபலிக்கும் விதத்தில் அதிகரித்தளவிற்கு அனுமதிக்கப்பட்டது.

(அ) மத்திய வங்கியின் தலையீடு மட்டுப்படுத்தப்பட்டதன் விளைவு யாது?

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

(ஆ) 2016 - 2017 காலப்பகுதியின் உயர்மட்ட பணவீக்கத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணி யாது?

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

(இ) 2016 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் உறுதியான செலாவணி வீதம் எவ்வாறு தொடர்ந்தது?

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

(ஈ) வெளிநாட்டுத்துறை நிலுவைகளிற் காணப்பட்ட அசைவுகள் எவற்றைப் பிரதிபலித்தன?

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

(உ) இரண்டாவது ஆண்டும் தொடர்ந்து சென்மதி நிலுவையின் பற்றாக்குறைக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் யாவை?

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

*(15 புள்ளிகள்)*

[பக் 3 ஐப் பார்க்க.

(ii) பின்வரும் பகுதியை வாசித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுக.

சமூகத்தில் உள்ள நடுத்தர வருமானம் பெறும் கூட்டத்தினரின் அதிகரித்த கொள்வனவு சக்தியுடன் கடந்த சில வருடங்களாக சமூக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் தனியார் துறையினரின் ஈடுபடலின் முக்கியத்துவமானது அதிகரித்துவருகின்றது. அதிகரித்த கொள்வனவு சக்தியுடன் வினைத்திறனானதும் உயர் தரமுடையதுமான சுகாதாரம் மற்றும் கல்வி மீது அதிகளவு கேள்வியை நுகர்வோர் கொண்டுள்ளனர். மாறாக ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற சமூக விடயங்கள் தனியார் நன்மையை காட்டிலும் சமூகத்தினரும் உயர்ந்த நன்மைகளை வழங்குமென்பதனால் தனியார் துறை முதலீடுகள் பொருளாதாரத்திற்குத் தேவைப்படும் அளவிலும் பார்க்கக் குறைவாக இருக்கும். இதன் விளைவாக, இத்தகைய சமூக உட்கட்டமைப்பினை வழங்குவதில் அரச தலையீடு முனைப்பானதாக மாறியிருக்கிறது. குறைந்த வருமான தொகுதியினர் இவ்வசதிகளைப் போதுமானளவிற்குப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ள வேளையில் உயர் மற்றும் நடுத்தர வருமானத் தொகுதியினரின் அதிகரித்த கேள்வியினைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கம் தனியார் துறையினரால் இத்தகைய வசதிகள் வழங்கப்படுவதையும் அதிகரிக்கவேண்டியுள்ளது. அத்தகைய சமூக உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதற்கு தனியார் துறையினருக்கு நிறுவன ரீதியான உதவி போன்ற ஏனைய துணைநிரப்பு மூலவளங்களை வழங்குகின்ற அதேவேளை தர உத்தரவாத வழிகாட்டல்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்புப் பொறிமுறை மற்றும் தனியார் துறை மற்றும் அரச துறை நிறுவனங்களுக்கும் ஏற்புடைத்தான சட்டக் கட்டமைப்புக்கள் போன்ற நிறுவன ரீதியான கட்டமைப்பொன்றினை உருவாக்கிக் கொள்வது அரசாங்கத்திற்குத் தவிர்க்க முடியாததாக இருக்கும். இது தனியார் நிறுவனங்கள் தமது இலாபத்தினை அதிகரிக்கும் குறிக்கோள்களைச் சமப்படுத்திக் கொண்டு சமூகப் பொறுப்பாண்மையுடனும் அதன் வாயிலாக பொருளாதாரத்திற்குப் பெருமளவிற்குப் பங்களிப்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவசியமாகும்.

(அ) தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு நிறுவன ரீதியான கட்டமைப்பொன்றினை உருவாக்கும் செயலானது அரசாங்கத்திற்கு இன்றியமையாததாய் இருப்பதேன்?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(ஆ) சமூக உட்கட்டமைப்பினை வழங்குவதில் தனியார் துறையின் முக்கியத்துவம் அதிகரித்து வரும் சூழ்நிலைகள் யாவை?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(இ) சமூக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் அரச தலையீட்டினால் தனியார் துறை பெறக்கூடிய நன்மைகள் யாவை?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(ஈ) தனியார் துறை முதலீடுகள் பொருளாதாரத்துக்குத் தேவைப்படும் அளவிலும் பார்க்கக் குறைவாக இருப்பதற்கான காரணம் யாது?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(உ) அதிகரித்த கொள்வனவு சக்தியுடன் நுகர்வோர் அடைய விழையும் சேவைகள் யாவை?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

*(15 புள்ளிகள்)*

[பக் 4 ஐப் பார்க்க.

**2.** கீழே தரப்பட்டுள்ள பகுதியை வாசித்து அதிலுள்ள சொற்களின் எண்ணிக்கையை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி சாராம்சப்படுத்தி எழுதி, அதற்குப் பொருத்தமான ஒரு தலைப்பையும் இடுக.

நிதியியல் நிறுவனங்களின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்த தன்மை மேலும் அதிகரித்து அதன் மூலம் நிதியியல் துறையில் பொதுமக்களின் நம்பிக்கையினை மேம்படுத்துவதனைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கி உட்பட ஒழுங்குமுறைப்படுத்தல் முகவர்கள், நிதியியல் நிறுவனங்களுக்கான மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகளையும் முன்னெடுத்தனர். 2017 ஆம் ஆண்டு யூலையிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பாசல் III இன் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகளை மத்திய வங்கி மேலும் அதிகரித்தது. அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் நிதியியல் கூற்றுக்களை பிரசுரிக்கும் பொழுது ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம், திரவத்தன்மை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பன மீதான முக்கிய தகவல்களையும் வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டவேளையில் நிதிய மாற்றல்களுக்காக விதிக்கப்படும் கட்டணங்களையும் பெரியளவில் வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். கணனிவழி சைபர் பாதுகாப்பு தொடர்பில் ஏற்படும் இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் கணனிவழி சைபர் பாதுகாப்புச் சம்பவங்கள் பற்றி அறிக்கைகளை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், வெளிப்படையான தன்மையினையும் விலை கண்டறிதலையும் அதிகரிப்பதன் மூலம் வங்கித்தொழில் துறைக்குள்ளே அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தையினை மேம்படுத்துவதற்காக பல வழிமுறைகள் எடுக்கப்பட்டன. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளை மீளாய்வு செய்வதற்கான ஒழுங்குமுறை அளவீடுகளை எடுப்பதில் கவனம் செலுத்தப்பட்டது.

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

*(20 புள்ளிகள்)*

[பக் 5 ஐப் பார்க்க.

## பகுதி - (ஆ) பொது விவேகம்

● **1** தொடக்கம் **5** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் நான்கு தெரிவுகளைக் கொண்ட வெவ்வேறு சொற்கள் / சொற்சோடிகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் மூன்று தெரிவுகளின் சொற்கள் / சொற்சோடிகள் மாத்திரம் நிதி முகாமைத்துவ முறையுடன் தொடர்புபட்ட வகையில் கூட்டமாக்கப்படக்கூடியவை. எஞ்சிய தெரிவு குறித்து நிற்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. (1) குறிக்கோள் (2) நோக்கம் (3) திட்டம் (4) இலக்கு (.........)

2. (1) பற்றுச்சீட்டு (2) சிட்டை (3) உறுதிப்பத்திரம் (4) விலைப்பட்டியல் (.........)

3. (1) செல்வம் (2) ஆதனம் (3) பெறுமதி (4) சொத்து (.........)

4. (1) பணத் தாள்கள் (2) காசு காசோலைகள்
(3) பரிசு உறுதிப்பத்திரம் (4) கடன் அட்டை (.........)

5. (1) மானியம் (2) நிதியம் (3) பரிசு (4) விருது (.........)

● **6** தொடக்கம் **10** வரையான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

உள்ளூர் நிதி நிறுவனங்களின் வரிசைப்படுத்தலில் பெறப்பட்ட பெறுபேறுகளுக்கேற்ப தனபால என்பவர் தமக்குத் தேவையான *A, B, C, D* எனும் நான்கு நிறுவனங்களின் தகவல்களைக் கொண்ட ஆவணம் ஒன்றினைத் தயாரித்தார். இந்நான்கு நிறுவனங்களும் அவர் வசிக்கும் மாவட்டத்திலேயே அமைந்துள்ளன. இவ்வொவ்வொரு நிறுவனத்தினதும் தேசியமட்ட வரிசைநிலை (rank) தவிர்ந்த அவர் வசிக்கும் மாகாண வரிசைநிலை மாவட்டத்தின் வரிசைநிலை ஆகியவற்றைப் பதிவு செய்தார். அவரது ஆவணத்தின் பிரதி ஒன்றில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. அப்பிரதியில் இலக்கங்கள் தெளிவற்றிருந்த இடங்களில் பின்வரும் அடையாளங்கள் ✱, ●, @, ❖, # காட்டப்பட்டுள்ளன. சிறந்த நிறுவனத்திற்கு இலக்கம் 1 என்ற வகையில் வரிசைநிலை இலக்கமிடப்பட்டிருக்கிறது. இவ்வரிசைப்படுத்தலில் எந்தவொரு நிறுவனமும் சமமான இடத்தை பெறவில்லை.

| நிறுவனம் | தேசிய வரிசைநிலை (Island rank) | மாகாண வரிசைநிலை (Provincial rank) | மாவட்டவரிசைநிலை (District rank) |
|---|---|---|---|
| *A* | ✱ | 4 | ❖ |
| *B* | 15 | 3 | 2 |
| *C* | 1 | @ | # |
| *D* | ● | 20 | 7 |

இதற்கேற்ப பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதனைக் குறிக்கும் தெரிவின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

6. @ மற்றும் # இனால் குறிக்கப்பட்டுள்ள நிலைகள் முறையே,
(1) 1, 1 (2) 1, 2 (3) 1, 3 (4) 2, 3 (.........)

7. தனபால வசிக்கும் மாகாணத்தில் உள்ளதும் அவர் வசிக்கும் மாவட்டத்தில் இல்லாததுமான நிறுவனம் *B* இலும் சிறந்த நிறுவனமாக வரிசைப்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் எத்தனை?
(1) 0 (2) 1 (3) 3 (4) 12 (.........)

8. இங்கு ❖ இனால் குறித்துக் காட்டப்படும் மாவட்ட வரிசை நிலை என்ன?
(1) 1 (2) 3 (3) 4 (4) 5 (.........)

9. தனபல வசிக்கும் மாகாணத்தில் உள்ள நிறுவனங்களுள், நிறுவனம் *A* யிலும் பார்க்க சிறந்த நிலையில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 5 மடங்கு எண்ணிக்கையான நிறுவனங்கள் தேசிய மட்டத்தில் வரிசை நிலைப்படுத்தப்பட்டிருப்பின் ✱ எனும் குறியீட்டால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள வரிசைநிலை யாது?
(1) 12 (2) 13 (3) 16 (4) 20 (.........)

10. பின்வரும் இலக்கங்களில் எது ● இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள இலக்கமாக இருக்கமுடியாது?
(1) 30 (2) 32 (3) 50 (4) 52 (.........)

/பக் 6 ஐப் பார்க்க.

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

பின்வரும் அட்டவணையில் நிதி தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் ஒன்றின் நிகழ்ச்சி நிரலின் ஏழு செயற்பாடுகளின் நேர அட்டவணை தரப்பட்டுள்ளது.

| ஒதுக்கப்பட்ட நேரம் | செயற்பாட்டு அட்டவணை |
|---|---|
| மு.ப 9.00 - மு.ப 9.05 | ***A*** |
| மு.ப 9.05 - மு.ப 9.15 | ***B*** |
| மு.ப 9.15 - மு.ப 9.30 | ***C*** |
| மு.ப 9.30 - மு.ப 9.50 | ***D*** |
| மு.ப 9.50 - மு.ப 10.00 | ***E*** |
| மு.ப 10.00 - மு.ப 10.25 | ***F*** |
| மு.ப 10.25 - மு.ப 10.30 | ***G*** |

இக்கூட்டத்தை மிகவும் பயன்உறுதி வாய்ந்த முறையில் நடத்துவதற்காக பொறுப்பான அலுவலர் முன்மொழியப்பட்ட நிகழ்ச்சி நிரலை திருத்தி அமைத்தார். திருத்தத்தின்போது நேர இடைவெளி மாற்றி அமைக்கப்படவில்லை. அத்துடன் பின்வரும் நிபந்தனைகள் கருத்தில் கொள்ளப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

* ஒவ்வொரு செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட நேர ஒதுக்கீடு ஆரம்ப முன்மொழிவிலிருந்து வேறுபடலாம்.
* ***B*** ஆனது ***G*** இற்கு பின் உடனடியாக செயற்படுத்தப்படவேண்டும். ஆனால் ***G*** இலும் பார்க்க குறைந்த நேரத்தில் முடிக்கப்படவேண்டும்
* ***A*** இற்கும் ***C*** இற்கும் இடையில் நான்கு செயற்பாடுகள் செயற்படுத்தப்படவேண்டும்.
* ***G*** யிலும் பார்க்க ***C*** இற்கு கூடிய நேரம் தேவை
* செயற்பாடு ***D*** முடிவடைந்ததும் செயற்பாடு ***F*** ஆரம்பிக்கவேண்டும்.

இத்தகவல்களுக்கேற்ப பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான **விடையை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

11. தொடரொழுங்கு நிலையில் **மாற்றமடையாத** செயற்பாடு எது? (………)

12. தொடரொழுங்கில் மாற்றமடையும் ஆனால் நேர ஒதுக்கீட்டில் மாற்றமடையாமல் செயற்பாடு எது? (………)

13. முன்மொழியப்பட்ட நிகழ்ச்சி நிரலில் இருந்து முன்னராக நிகழத்தக்கதும் முன்மொழியப்பட்ட நிகழ்ச்சி நிரலிலும் திருத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலிலும் அண்மித்த செயற்பாடாக காணக்கூடியவாறு உள்ள இரண்டு செயற்பாடுகளை முறையே எழுதுக. (……… , ………)

14. முன்மொழியப்பட்ட நிகழ்ச்சி நிரலில் ஒதுக்கப்பட்டுள்ள நேரத்திலும் பார்க்க **அதிகளவு நேர நிமிடங்களை** ஒதுக்கவேண்டியுள்ள செயற்பாடு எது? (………)

15. திருத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலில் மு.ப 10.00 இற்குமுன் **அதிகளவு நேரத்தை** ஒதுக்கவேண்டிய செயற்பாடு எது? (………)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

தொழிலாளி ஒருவர் திங்களில் இருந்து வெள்ளி வரை பெற்ற பணத்தை போக்குவரத்து, காகிதாதிகள் மற்றும் உணவிற்காக மாத்திரம் செலவிட்ட முறையானது தவறுகளுடன் கீழே தரப்பட்ட அட்டவணையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட தகவல்களின்படி அட்டவணையில் நான்கு பெறுமானங்கள் **மாத்திரம்** தவறாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றைக் கீழே தரப்பட்டுள்ள குறிப்புகளில் இருந்து அடையாளம் காணமுடியும்.

| தினம் | கிடைக்கப் பெற்ற பணம் ரூ. | போக்குவரத்து செலவு ரூ. | காகிதாதிகள் செலவு ரூ. | உணவுச் செலவு ரூ. | மொத்தச் செலவு ரூ. | கிடைக்கப்பெற்ற பணத்தில் மீதி ரூ. |
|---|---|---|---|---|---|---|
| திங்கள் | 1000 | 250 | 200 | 350 | 800 | 300 |
| செவ்வாய் | 1200 | 350 | 250 | 400 | 1000 | 200 |
| புதன் | 1000 | 250 | 150 | 400 | 800 | 300 |
| வியாழக்கிழமை | 1500 | 400 | 200 | 450 | 1050 | 450 |
| வெள்ளி | 1300 | 350 | 250 | 350 | 850 | 450 |
| மொத்தம் | 6100 | 1600 | 950 | 1950 | 4500 | 1700 |

[பக் 7 ஐப் பார்க்க.

மேற்குறித்த அட்டவணையில்

புதன்கிழமை தொடர்பாக ஒரு பெறுமதி மாத்திரம் தவறாக உள்ளது.

'கிடைக்கப்பெற்ற பணம்' நிரலில் ஒரு 1000 ரூபா மாத்திரம் திருத்தப்படவேண்டும்.

திங்கட்கிழமை 'மொத்தச் செலவு' உம் 'மீதி' உம் சரியாக உள்ளது.

'காகிதாதிகள் செலவு' நிரலில் ஒரு பெறுமதியும் 'மொத்தம்' நிரையில் ஒரு பெறுமதியும் தவறாக உள்ளது.

இதற்கேற்ப பின்வரும் ஒவ்வொரு வினாவிற்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதற்குரிய தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

16. புதன்கிழமை தொடர்பான **தவறான** பெறுமதி எந்த நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது?
    (1) கிடைக்கப்பெற்ற பணம் (2) போக்குவரத்து செலவு
    (3) மொத்த செலவு (4) மீதிப்பணம் (.........)

17. "கிடைக்கப்பெற்ற பணம்" நிரலில் உள்ள தவறு என்ன?
    (1) மொத்தம் 6100 என குறிப்பிடப்பட்டுள்ளமை
    (2) திங்கள் பெற்ற பணம் ரூ. 900 எனக் குறிப்பிடப்படாமை
    (3) திங்கள் பெற்ற பணம் 1100 எனக் குறிப்பிடப்படாமை
    (4) புதன்கிழமை பெற்ற பணம் 1100 எனக் குறிப்பிடப்படாமை (.........)

18. "காகிதாதிகள் செலவு" நிரலில் உள்ள தவறை எவ்வாறு திருத்தலாம்?
    (1) திங்கட்கிழமைக்குரிய பணம் ரூ.100 என திருத்தப்படல்
    (2) புதன் கிழமைக்குரிய பணம் ரூ. 50 எனத் திருத்தப்படல்
    (3) வெள்ளிக் கிழமைக்குரிய பணம் ரூ. 150 எனத் திருத்தப்படல்
    (4) மொத்தப் பணம் என குறிக்கப்பட்ட பணம் ரூ. 1050 எனத் திருத்தப்படல் (.........)

19. ஐந்து நாட்கள் முடிவில் கிடைக்கப்பெற்ற பணத்தில் மீதியாகவுள்ள பணம் எவ்வளவு?
    (1) ரூ. 1700 (2) ரூ. 1600 (3) ரூ. 1550 (4) ரூ. 1500 (.........)

20. வியாழக்கிழமை உணவிற்கான செலவு ரூ. 500 ஆகப் பதிவுசெய்யப்பட முழு அட்டவணையிலும் எத்தனை பெறுமானங்கள் திருத்தப்படவேண்டும்?
    (1) 3 (2) 4 (3) 5 (4) 6 (.........)

● **21** தொடக்கம் **25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதற்குரிய தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

21. குறித்த ஒரு பொருளை 10% கழிவுடன் கொள்வனவு செய்யும்போது, அதன் நான்கு மடங்கு கழிவு வழங்கப்பட்டது. குறித்த அப்பொருளின் விலையை விட இரண்டு மடங்கு விலையான வேறொரு பொருளைக் கொள்வனவு செய்யும்போது அவ் இரண்டாவது பொருளுக்கு பெறப்படும் கழிவின் சதவீதம் என்ன?
    (1) 5% (2) 10% (3) 20% (4) 40% (.........)

22. தயாவதி என்பவர் தன்னிடம் உள்ள 1000 ரூபா நோட்டுக்களை ஒரு கடித உறையினுள் ஒரு நோட்டு வீதம் இடும்போது ஒரு கடித உறை போதாமல் இருந்தது. பின்னர் ஒரு கடித உறையினுள் இரண்டு 1000 ரூபா நோட்டுக்கள் வீதம் இடும்போது ஒரு கடித உறை எஞ்சியது. ஆரம்பத்தில் தயாவதியிடம் ரூ. 1000 நோட்டுகளாக இருந்த மொத்தப் பணத்தையையும் கடித உறையின் எண்ணிக்கையையும் **முறையே** குறிப்பிடும் விடை எது?
    (1) 3, 4 (2) 4, 3 (3) 3, 4 000 (4) 4 000, 3 (.........)

23. *A*, *B* எனும் கடிகாரங்கள் ஒரே சீரான வேகத்தில் இயங்கியபோதும் தவறான நேரத்தை காட்டின. ஒரு நிலையில் இரு கடிகாரங்களும் மணி 12.00 இல் நிலைப்படுத்தப்பட்டு ஒரே நேரத்தில் இயங்கவிடப்பட்டது. கடிகாரம் *A* ஆனது மணி 1.00 ஐக் காட்டும்போது கடிகாரம் *B* ஆனது முதல் முறையில் மணி 1.15 ஐக் காட்டியது எனின் கடிகாரம் *B* ஆனது முதல் முறையாக மணி 2.00 ஐக் காட்டும்போது கடிகாரம் *A* ஆனது காட்டும் நேரம் யாது?
    (1) 1.36 (2) 1.48 (3) 2.12 (4) 2.24 (.........)

24. ஒரு குறித்த ஆவணமொன்றில் ரூ. 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்படவேண்டியுள்ளது. இதற்காக ரூபா 1, 2, 5, 10 பெறுமதி உள்ள முத்திரைகளை மாத்திரம் உபயோகித்து எத்தனை வழிமுறைகளில் முத்திரைகளைத் தெரிவு செய்யலாம்?

(1) 8 (2) 9 (3) 10 (4) 11 (.........)

25. நபரொருவரின் ஒரே ஒரு அக்கா கமலா ஆவார். ஒரே ஒரு தங்கை கீதா. ஒரே ஒரு தம்பி ராஜா. ஒரேயொரு அண்ணன் சிறிபால. இந்நால்வரதும் தங்கையான கீதா எப்போதும் பொய் சொல்பவர் ஆவார். அவர் தனக்கு 3 சகோதரர்களும் ஒரு சகோதரியும் உள்ளனர் எனக் கூறினார். இத்தகவல்களுக்கேற்ப பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) சிறிபால சம எண்ணிக்கையான சகோதரர்களையும் சகோதரிகளையும் கொண்டுள்ளார்.
(2) கமலாவிற்கு இரண்டு தங்கைகள் இருக்கின்றார்கள்.
(3) ராஜாவிற்கு இரண்டு மூத்த சகோதரர்கள் இருக்கின்றார்கள்.
(4) கீதாவிற்கு ஒரு சகோதரி உள்ளார். (.........)

● **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.
1 தொடக்கம் 7 என இலக்கம் வழங்கப்பட்ட ஏழு தொழிலாளர்களுள் இல. 2, இல. 4, இல. 6, ஆகியோர் மாத்திரம் பெண்கள் ஆவார்.

ஐந்து நாட்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலை ஒழுங்கு கீழே தரப்பட்டுள்ளது.

* வேலையானது திங்கள் ஆரம்பித்து வெள்ளி முடிவடையும். நாள் ஒன்றுக்கு மூன்று தொழிலாளர் வேலை செய்வார்கள்.
* இல. 1 திங்கள் வேலை செய்வதில்லை. ஆனால் இல. 2 திங்கள் வேலை செய்யவேண்டும்.
* ஒவ்வொருவரும் ஒருநாள் வேலை செய்தபின் அடுத்தநாள் ஓய்வெடுப்பார்.
* இல. 3 மாத்திரம் 3 நாட்கள் வேலை செய்வதுடன் ஏனைய ஒவ்வொருவரும் 2 நாட்கள் மாத்திரம் வேலை செய்வார்கள்.
* புதன்கிழமையில் பெண்கள் இல. 2 உம் இல. 4 உம் மாத்திரம் வேலை செய்வதுடன் ஏனைய எல்லா நாட்களும் ஒரு பெண் வீதம் வேலை செய்வார்.
* இல. 6 உம் 7 உம் எப்பொழுதும் ஒன்றாக வேலை செய்வார்கள்.
* இரண்டு நபர்களுக்கு மாத்திரம் முதல்நாளிலும் இறுதிநாளிலும் வேலை செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இதற்கேற்ப பின்வரும் ஒவ்வொரு வினாவிற்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதற்குரிய தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

26. இல. 3 வேலை செய்யாத இரண்டு நாட்களும் எவை?

(1) திங்கள், புதன் (2) செவ்வாய், வெள்ளி
(3) செவ்வாய், வெள்ளி (4) வியாழன், வெள்ளி (.........)

27. இல. 4 வேலை செய்வது பின்வரும் நாட்களுள் எந்த நாளில் ஆகும்?

(1) திங்கள் (2) செவ்வாய் (3) வியாழன் (4) வெள்ளி (.........)

28. இல. 6 வேலை செய்யும் இரண்டு நாட்களும் எவை?

(1) செவ்வாய், வியாழன் (2) செவ்வாய், வெள்ளி
(3) திங்கள், புதன் (4) புதன், வெள்ளி (.........)

29. வெள்ளிக்கிழமையில் வேலை செய்யும் மூவரும் யாவர்?

(1) இல 1, 3 மற்றும் 4 (2) இல 2, 3 மற்றும் 4
(3) இல 3, 4 மற்றும் 5 (4) இல 4, 5 மற்றும் 7 (.........)

30. ஒரே குழுவினர் வேலை செய்யும் இரண்டு நாட்களும் எவை?

(1) திங்கள், புதன் (2) செவ்வாய், வியாழன்
(3) செவ்வாய், வெள்ளி (4) புதன், வெள்ளி (.........)

[பக் 9 ஐப் பார்க்க.

● **31** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

$V_1, V_2, V_3, V_4, V_5$ எனும் செலவீனங்களின் தலைப்புகளின் கீழ் நிறுவனத்திற்கு பெறப்பட்ட நிதி ஏற்பாடுகள் ரூ. 20, மில்லியன், ரூ. 30, மில்லியன், ரூ. 150 மில்லியன், ரூ. 750 மில்லியன் ரூ. 2 பில்லியன் ஆகும். இவை ஒழுங்கு வரிசையில் அமையவில்லை. $V_5$ செலவினங்களின் தலைப்பின் கீழ் பெறப்பட்ட நிதி ஏற்பாட்டில் 20% $V_1$ ஆகும். $V_2$ இற்கும் $V_4$ இற்கும் செலவீனங்களின் தலைப்பின் கீழ் பெறப்படும் மொத்த ஏற்பாட்டில் $V_2$ 60% ஆகும். ***A, B, C, D, E, F, G, H*** ஆகிய நிகழ்ச்சித்திட்டம் இச்செலவீனங்களின் தலைப்புகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட முறை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

* ***A*** உம் ***D*** உம் ஒரே செலவினங்களின் தலைப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ளது.
* ***E, F, G, H*** ஆகிய ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட செலவினங்களின் தலைப்புகளின் கீழ் செயற்படுத்தப்படுகிறது.
* மேற்குறித்த எட்டு நிகழ்ச்சித்திட்டங்களுள் ஒன்றேனும் இவற்றுள் ஒரு செலவினத்தின் தலைப்பின் கீழும் செயற்படுத்தப்படவில்லை.
* ***H*** உட்பட அதிக எண்ணிக்கையான நிகழ்ச்சித்திட்டங்கள் குறைந்த அளவு ஏற்பாடு பெறப்படும் செலவினங்களின் தலைப்பின் கீழ் செயற்படுத்தப்படுகிறது
* ***G, B*** ஆகிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒன்றுக்கு ஆகக்குறைந்தது ரூ. 800 மில்லியன் தேவையாகும்.
* இவற்றுள் ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் ரூ. 150 மில்லியன் நிதி ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்படுகிறது.
* $V_1$ அல்லது $V_2$ ஏற்பாடுகளின் கீழ் ***E*** நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படமுடியாது.

இதற்கேற்ப பின்வரும் ஒவ்வொரு வினாவிற்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதற்குரிய தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

31. நிகழ்ச்சித்திட்டங்கள் ***A*** உம் ***D*** உம் செயற்படுத்தப்படுவது எந்த செலவினங்களின் தலைப்பின் கீழ் ஆகும்?
(1) $V_1$ (2) $V_2$
(3) $V_3$ (4) $V_4$ (.........)

32. ***E*** நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படும் செலவீனங்களின் தலைப்பு எந்த நிதி ஏற்பாட்டின் கீழ் வழங்கப்படுகிறது?
(1) ரூ. 20 மில்லியன் (2) ரூ. 150 மில்லியன்
(3) ரூ. 750 மில்லியன் (4) ரூ. 2 பில்லியன் (.........)


33. ரூ. 150 மில்லியன் ஒதுக்கப்படும் செலவீனங்களின் தலைப்பின் கீழ் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டம் எது?
(1) ***E*** (2) ***F***
(3) ***G*** (4) ***H*** (.........)

34. இவற்றுள் எந்தவொரு நிகழ்ச்சித்திட்டமும் செயற்படுத்தப்படாத செலவீனத்தின் தலைப்பு எது?
(1) $V_1$ (2) $V_2$
(3) $V_3$ (4) $V_4$ (.........)

35. தரப்பட்ட தகவல்களுக்கு ஏற்ப ***C*** நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்கு எந்த தலைப்பு / தலைப்புகளின் திட்டமிடப்பட்டுள்ளது?
(1) $V_3$ மாத்திரம் (2) $V_4$ மாத்திரம்
(3) $V_5$ மாத்திரம் (4) $V_4$ அல்லது $V_5$ மாத்திரம் (.........)

/பக் 10 ஐப் பார்க்க.

- **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் நான்கு வரிப்படங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று வரிப்படங்களை ஒன்றாகச் சேர்க்கும்போது கீழே தரப்பட்டுள்ள பெரிய வரிப்படத்தின் ஒரு பகுதியை ஒத்த உருவை உருவாக்கமுடியும். இங்கு உருக்களை தேவைக்கேற்றவாறு சுழற்றுவதற்கு சந்தர்ப்பம் உண்டு.



அதற்கேற்ப பெரிய வரிப்படத்துடன் பொருந்தத்தக்கதாக உருவாக்குவதற்கு ஒவ்வொரு வினாவின் கீழும் தரப்பட்டுள்ள வரிப்படங்களுள் தேவையற்ற வரிப்படத்தைத் தெரிவுசெய்து அதற்குரிய தெரிவின் **இலக்கத்தை** அதற்குரிய **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

36.



(1) (2) (3) (4) (.........)

37.




(1) (2) (3) (4) (.........)

38.



(1) (2) (3) (4) (.........)

39.



(1) (2) (3) (4) (.........)

40.



(1) (2) (3) (4) (.........)

● **41** தொடக்கம் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் நான்கு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்று கூற்றுகள் ஏதோ ஒரு காரணத்தால் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. எஞ்சிய கூற்று தவறாக இல்லாது, அது ஏனைய இரண்டு கூற்றுடன் ஒத்தது என்பதை நிருபிப்பதற்கு சான்று இல்லை. இத்தகைய **பொருந்தாத** கூற்றைத் தெரிவுசெய்து, அத்தெரிவு குறித்து நிற்கும் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

41. (1) செவ்வாய்க்கிழமையில் பரீட்சை நடைபெறுகிறது.
(2) வியாழக்கிழமை ஒரு போயா நாளாகும்.
(3) பரீட்சை இருபத்தேழாம் திகதி நடைபெறுகிறது.
(4) பரீட்சை நாளுக்கு பிறகு போயா நாளாகும். (.........)

42. (1) அதிக விலையான பிஸ்கட் சுனிலால் கொண்டுவரப்பட்டதுடன் விலை குறைந்த பிஸ்கட் கமலாவால் கொண்டுவரப்பட்டது.
(2) நிமால் கொண்டு வந்த பிஸ்கட்டின் விலை அதிகமாக இல்லாவிடினும் அவை புதிய சுவை கொண்டவை.
(3) சுனில் கொண்டுவந்த பிஸ்கட் நிமால் கொண்டுவந்த சுவையான பிஸ்கட் இலும் பார்க்க சுவையற்ற பிஸ்கட் ஆக இருந்தாலும் அவை அதிகம் விலையானவை.
(4) நிமல் கொண்டுவந்த பிஸ்கட் அதிகம் விலையாக இருந்ததுடன் கமலா கொண்டுவந்த பிஸ்கட் இலும் பார்க்க சுவையானதாகும். (.........)

43. (1) ***A, B, C, E*** ஆகிய நான்கு இலக்கங்களினதும் ஏறுவரிசை ***B, C, A, E*** ஆகும்.
(2) ***A, C, D, E*** ஆகிய நான்கு இலக்கங்களினதும் இறங்குவரிசை ***D, E, A, C*** ஆகும்.
(3) ***A, B, C, D*** ஆகிய நான்கு இலக்கங்களினதும் ஏறுவரிசை ***B, C, A, D*** ஆகும்.
(4) ***B, C, E, F*** ஆகிய நான்கு இலக்கங்களினதும் இறங்குவரிசை ***E, C, B, F*** ஆகும். (.........)

44. (1) முறையே தேவி, மாலா, ரம்யா ஆகியோர் ராஜாவின் சின்ன அக்கா நடுவில் அக்கா, பெரியக்கா என்பதுடன் டேவிட் ராஜாவின் அண்ணா ஆவார்.
(2) முறையே மாலா, ரம்யா ஆகியோர் தேவியின் சின்னக்கா, பெரியக்கா ஆக இருப்பதுடன் டேவிட் ஆனவர் தேவியின் அண்ணாவும், ராஜா தம்பியும் ஆவார்.
(3) ரம்யா ஆனவர் டேவிட்டின் அக்கா ஆக இருக்கும் அதேவேளை மாலாவும் தேவியும் அவரின் தங்கைகளும் ஆவார். ராஜா தம்பியும் ஆவார்.
(4) ரம்யாவும் டேவிட்டும் மாலாவுக்கு மூத்தவர்கள் ஆக இருக்கும் அதேவேளை அவருக்குப் பின் தேவ-ியும் அவருக்குப் பின் ராஜாவும் பிறந்துள்ளனர். (.........)

45. (1) நிறுவனம் ஒன்றிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒரேயொரு பதவிநிலை அலுவலர் கடைசியாக நியமனம் பெற்ற செய்யப்பட்டவரான இளைய பெண்ணும் ஆவார்.
(2) நிறுவனத்துக்கு பதவிநிலை அலுவலர் பதவிக்கு இறுதியாக நியமனம் பெற்ற அலுவலர் தவிர ஏனைய பதவிநிலை அலுவலர் யாவரும் ஆண்கள் ஆவார்.
(3) நிறுவனத்தில் சேவை செய்யும் பெண் பதவிநிலை அலுவலரிலும் பார்க்க அங்கு சேவை செய்யும் ஆண் அலுவலர் யாவரும் வயது கூடியவர்கள் ஆவார்.
(4) நிறுவனத்தில் பதவிநிலை பதவிக்கு புதியவரும் இளையவரும் ஆன நபர் தற்போது அங்கு பணிபுரியும் ஒரேயொரு பதவிநிலை அலுவலர் பெண் ஆவார். (.........)


/பக் 12 ஐப் பார்க்க.

● **46** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழும் கோட்டு உருக்கள் தரப்பட்டுள்ளன. அவை இடமிருந்து வலமாக குறித்த ஒரு கோலத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இக் கோட்டு உருக்களில் இருந்து **?** குறியிடப்பட்ட இடத்திற்குரிய பொருந்தக்கூடிய உருவை தெரிவுசெய்து அத்தெரிவு குறித்து நிற்கும் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

46.  ?



(1) (2) (3) (4) (.........)

47.  ?



(1) (2) (3) (4) (.........)

48.  ?

(1) 

(2) 

(3) 

(4) 

(.........)

49. 1.1 1.21 1.331 1.4641 ?

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1.61051 | 16.1051 | 1.60151 | 1.16051 |

(.........)

50. 2 12 36 80 150 ?

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 196 | 212 | 216 | 252 |

(.........)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2018)

# Limited / Open Competitive Examination for Recruitment to Class III of the Sri Lanka Accountants' Service -2016 (2018)

## (06) அரச நிதி முகாமைத்துவம்
## Public Financial Management

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. "அரச நிதியின் மீது பாராளுமன்றம் பூரண கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும். வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கமைய ஒன்றித்த நிதியத்திலிருந்து (Consolidated fund) செலவுகளை மேற்கொள்வதற்கான அதிகாரமானது பாராளுமன்றத்தால் ஒதுக்கீட்டு மசோதா (Appropriation bill) நிறைவேற்றப்பட்ட பின்னரும் ஒதுக்கீட்டு மசோதா சட்டமாக (ஒதுக்கீட்டுச் சட்டம் Appropriation Act) வந்த பின்னரும் நிதி அமைச்சானது ஆணைகளை (warrants) வழங்கிய பின்னரும் பெறப்படும்."
   - (i) "ஒன்றித்த நிதியம்" என்பதனைச் சுருக்கமாக விளக்குக.
   - (ii) குறிக்கப்பட்ட நேரத்தில் ஒன்றித்த நிதியத்தின் மீதியானது எவ்வாறு பெறப்படுகிறது?
   - (iii) ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம் "கடன் பெறக்கூடிய உச்ச வரையறை" என்றால் என்ன? இது எவ்வாறு கணிக்கப்படும்?
   - (iv) வருடாந்த வரவு செலவுத் திட்டச் செயற்பாடு தொடர்பில் அரசின் சகல கடன் பெறும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவது சம்பந்தப்பட்டுள்ள **இரண்டு** நிறுவனங்கள் எவை?

   *(05 × 4 = 20 புள்ளிகள்)*

2. (i) அரசாங்க ஆதனமானது இழக்கப்படும்போது அல்லது சேதமடையும்போது நிதிப் பிரமாணம் FR 103 (1) இன் பிரகாரம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*
   (ii) எவையேனும் கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான உறுதிச்சீட்டு (voucher) ஒன்றைச் சான்றுபடுத்தும்போது கணக்காளர் ஒருவர் FR 138 இன் பிரகாரம் கருத்திற் கொள்ளவேண்டிய பிரதான அம்சங்களை விளக்குக. *(10 புள்ளிகள்)*

3. (i) வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் பிரகாரம், அரசாங்க செலவீடுகளானது மீண்டெழும் செலவீடுகள் (Recurrent expenditure) மற்றும் மூலதனச் செலவீடுகள் (Capital expenditure) என இரண்டு பெரும் செலவீட்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகையிலும் காணப்படும் பிரதான கூறுகள் எவை? அவற்றுள் **ஐந்து** செலவீடுகளைச் சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*
   (ii) அரசாங்க வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஈடுபடும் **ஐந்து** வெவ்வேறு திறைசேரித் திணைக்களங்களைப் பெயரிடுக. *(05 புள்ளிகள்)*
   (iii) நீங்கள் மேலே பெயர் குறிப்பிட்ட அத்தகைய திறைசேரித் திணைக்களங்களுள் **இரண்டின்** தொழிற்பாடுகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

4. (i) திறைசேரிக் கணக்குப் புத்தகங்களுடன் (Treasury book of accounts) திணைக்களங்களின் கணக்குப் புத்தகங்கள் (departmental books of accounts) மாதாந்தம் இணங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குக. *(05 புள்ளிகள்)*
   (ii) நிதியாண்டின் இறுதியின் போது "முற்பண மீதியைத் தீர்த்தல்" (settlement of imprest balance) என்பதனால் நீர் கருதுவது யாது? *(05 புள்ளிகள்)*
   (iii) அரச நிதியை முகாமை செய்வதுடன் தொடர்புபட்ட வகையில் கணக்காய்வாளர் நாயகத்தின் வகிபாகத்தை விளக்குக. *(10 புள்ளிகள்)*

5. (i) "அரசாங்க பொருள் பெறுகை (Procurement) (விலை கோரல்) நடவடிக்கைகளானது அரச நிதி முகாமைத்துவத்தின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும்." அரசாங்க பொருள் பெறுகையின் பிரதான அடிப்படைத் தத்துவங்களைக் கருத்திற் கொண்டு இக்கூற்றை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*
   (ii) பின்வரும் சோடிப் பதங்களுக்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விளக்குக.
      (a) பிரதம கணக்கீட்டு அலுவலரும் கணக்கீட்டு அலுவலரும் *(05 புள்ளிகள்)*
      (b) பொறுப்புக்கூறலும் (Responsibility) வகைகூறலும் (Accountability) *(05 புள்ளிகள்)*

***